


# தரை பிளந்து விழுங்குவாயே!

மழைவெள்ளம் மிகுந்(து)ஊரை அழிக்கையிலே
மகிழ்ச்சியுடன் பாட்டியற்றிப் பாடுவோமா ?
கழைமிகுந்த காட்டுத்தீ நகர்பற்றிக்
கருக்கையிலே இலக்கியங்கள் கதைக்குவோமா ?
குழைவுற்ற சேற்றுக்குள் புதைபடுங்கால்
கூட்டங்கள் விழாக்களென எண்ணுவோமா ?
தழைவின்றித் தமிழினந்தான் இலங்கையிலே
தான்மடிய, இவையிங்கே தேவைதாமோ ?

சூல்கொண்ட பெண்ணொருத்தி கருக்கலைந்து
துடிக்கையிலே கணவன்யாழ் மிழற்றுவானோ ?
கால்கொண்ட சூறைவளி சுழற்றுகையில்
கவின்கூரை குடிலுக்கு வேய்குவோமா ?
தோல்வழன்று கழலுகையில் பொன்னணிகள்
துவளும்வகை மனைவிக்குப் பூட்டுவோமா ?
மால்கொண்ட தமிழினந்தான் இலங்கையிலே
மாள,இங்கே கலை,காட்சி தேவைதாமோ ?

அமைச்சரெலாம் தமிழகத்தில் நாளெல்லாம்
பொழுதெல்லாம் அரசுவிழாக் குளிக்கின்றார்கள் !
நமைச்சலுறும் உள்ளத்தால் வேடிக்கை
விளம்பரங்கள் விளையாடிக் களிக்கின்றார்கள் !
குமைச்சலுறக் கத்துகின்றார் கமறுகின்றார்,
கணமெல்லாம் இலங்கையிலே தமிழமக்கள் !
எமைச்சுமக்கும் தமிழ்நிலமே ! இவைபொறுக்க
இயல்கிலையே ! தரைபிளந்து விழுங்குவாயே !

சுவடி : 23
ஓலை : 6

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
உருபா : 1-75

# நமக்கு வந்த மடல்கள்.

O: 1219: பேரன்பு மிக்க பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம். அண்மையில் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்கள் கிடைத்தன. இதழ்கள் உரிய காலத்திலும் நன்முறையிலும் வெளிவருவது கண்டு பேருவகை எய்தினேன். இந் நிலை தொடர்ந்து நீடிக்க வேண்டிக் கொள்கிறேன்.

தென்மொழி சுவடி 23, ஓலை 4. இல் தங்களின் ஆசிரியஉரை, மொழியுணர்வற்ற தமிழர்களுக்கு விழிப்பூட்டும் வகையில் அமைந்திருந்தது. 90 விழுக்காட்டிற்கு மேற்பட்ட தமிழர்களின் நிலை வெட்கும்படிதான் அமைந்துள்ளது. தமிழில் கையொப்பமிட்டால், மற்றவர்கள் தங்களைக் கற்றவர்களாகவே மதிக்க மாட்டார்கள் என்ற தாழ்வு எண்ணமே இவர்களிடம் மேலோங்கியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாகவே நான் சந்திக்கும் ஒவ்வொருவரிடமும் இக் கருத்துகளை (தங்கள் ஆசிரிய உரையில் உள்ளவற்றை)யே எடுத்துக் கூறி விழிப்பூட்ட முயற்சி செய்து வருகிறேன். பிழைப்புக்குத் தமிழ் கற்ற தமிழாசிரியர்கள் கூட ''யார்க்கு வந்ததோ நமக்கென்ன'' வென்ற நிலையில் உள்ளனர். தமிழுக்கு ஏற்றம் தரும் வகையில் பாடுபடாவிட்டாலும் அதற்குக் கேடு ஏற்படாத வகையில் நடந்து கொண்டாலே போதும் என்ற நிலைதான் உள்ளது.

இந்த நிலையில் ஓரளவு கற்றவர்களும் எளிய மக்களும் எங்கே விழிப்படையப் போகிறார்கள்? கற்றவர்கள்- ஆசிரியப்பெருமக்கள் முயன்றால் தங்களையும் மாற்றிக் கொண்டு, எளிய மக்களையும் மாணவர்களையும் விழிப்புறச் செய்யலாம். செய்வார்களா?

தங்கள் அன்புத் தொண்டன், -சீத்தலைச்சாத்தனார், உ.செல்லூர்.


O: 1220: பெருந்தகை ஐயா அவர்களுக்கு, வணக்கம். குறைகளே இல்லாத நிறைமாந்தர் என்று எவரும் இலர். பெரியாரிடமும்—கொள்கையளவிலும்கூட—குறைகள் இருந்தன. 'தென்மொழி'யும் இதற்கு நெறி விலக்கில்லை.

அண்மையில் மதமாற்றம் செய்து கொண்டோரை வாழ்த்தி நின்றது தென்மொழி; மதமாற்றச் செயலையே ஏற்றுக் கொண்டது போலும் கருத்தறிவித்தது. இந்த நிலையில், தென்மொழி சுவடி 23, ஓலை 4இல் வெளிவந்துள்ள திரு. கி. இளஞ்சேரல் முதுபாண்டியன் அவர்களின் கருத்து மடல், தென்மொழி வரலாற்றில் காலத்தின் தேவை என்னலாம்.

நமக்கு எந்த மதமும் தேவையில்லை. முதலில் நாம் தமிழர் என்றே அமைவோம். தமிழத்தை — தமிழியத்தை — தாயாக ஏற்றுக் கொள்பவர் யாராயினும், அவர் எந்த மதத்தவராயினும் அவரைத் தமிழராகக் கொண்டு உறவாடுவோம். முதலில் ஆங்கிலம், பின்னரே தமிழ் என்பாரும், முதலில் உருது பின்னரே தமிழ் என்பாரும் நமக்கு அயலவர். அந்த நிலையில் நமது உறவு அவர்களுடன் அமையட்டும்.

அடுத்து, தென்மொழியின் இறையாண்மை என்பது வள்ளுவத்தின் மெய்ப் பொருளே என்று அறிவித்துவிடுதல் நலம் பயக்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

*[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]*




# தென்மொழி

மொழி—இனம்—நாடு.


**நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு ஒன்று விடுதலை அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.


பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

**ஆசிரியர்:மா.பூங்குன்றன்.க.மு.**

புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி த. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசுஆர். பிரான்சிசு, தென்மொழி கா.இளமுருகன், தென்மொழி த. தானியேல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன், பாவலர். சா. சி. சுப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார், தென்மொழி த. அரிமா வளங்கோ; பொன். பாலகிருட்டிணன்; தென்மொழி இரா. பாலகங்காதரன் (தொலைபேசி : 847829)

சுவடி 23] உ0கஎ ஆடவை (மே-சூன்-'87) [ஓலை 6


# இந்தியாவில் எடுத்த எடுப்பில் பொருளியல் புரட்சியை உருவாக்க முடியுமா? -2



மக்களின் மனமாற்றத்திற்கான முயற்சிகளை நாம் தொடங்கிய மட்டில், நம்முடன் இருந்து, நம் மக்கள் மனமலர்ச்சிக்குத் துணையாக வருகின்றவர்களிடத்திலிருந்-தும், நாம் முன்னர் கூறிய அரசிடத்தி-லிருந்தும் பலவேறு மாறுபாடான கருத்து-கள், எழுச்சி கொள்ளுகின்றன. அவற்றை

எதிர்கொள்ளவே நமக்கு நிறைய ஆற்றல்கள் தேவைப்படுகின்றன. இங்கு ஒன்றை நாம் தெளிவுற சிந்தித்தாக வேண்டும்.

ஒரு கருத்தை நேர்முகமாக உடன்பாட்டுப் போக்குடன் எடுத்துச் செல்வது என்பது எளிது. அஃது ஆற்றின் ஓட்டத்தோடு நீந்துவதைப் போன்றது. ஆனால் எதிர்முகமாக, மாறுபட்ட போக்கில் எடுத்துச் செல்வது மிகமிகக் கடினமானது. அஃது ஆற்றின் ஓட்டத்தை எதிர்த்து நீந்துவது போன்றது. பெரும்பாலும் புரட்சி தேவைப் படுகிற மக்கள் அறியாமை மிகுந்தவர்களும் உணர்ச்சியூட்டப்பட வேண்டியவர்களுமாகவே இருப்பர். அத்தகையவர்களுக்குக் கல்வியறிவும் அறவே இல்லாமலோ அல்லது குறைவாகவோ இருந்துவிட்டால், ஊமையாகவும், செவிடாகவும், குருடாகவும் இருக்கின்ற ஒருவனுக்கு அறிவூட்டுகின்ற முயற்சியாகவே இருக்கும்.

ஆக, நாம் எடுத்துக் கொள்ளுகின்ற முயற்சியினது கடினம்—அதைச் செய்ய முயலுகின்றபோது நாம் எதிர்கொள்ளுகின்ற மாறுபட்ட நடவடிக்கைகள்—இனி நாம் யாருக்காக, யாரிடத்தில் செய்கின்றோமோ, அவர்களே நம்மை நம்பாமலும் ஏற்றுக்கொள்ள மறுகின்ற தன்மையிலும் இருக்கின்ற நிலை—இவை அத்துணையையும் நாம் எதிர்த்துக் கொண்டு போவதென்றால், அஃது என்ன கொஞ்ச நஞ்சமான முயற்சியில் முடிகின்ற செயலா? இவை மூன்று செயல்களிலும் மூன்றாவது செயலான—நாம் யாருக்காக இப்புரட்சியை எடுத்துச் செல்ல இருக்கின்றோமோ, அவர்களுக்கு நம் செயல்களில் நம்பிக்கை வரும்படி செய்கின்ற செயல்கள்தாம் — மிக மிகக் கடினமானவை. இதைப் புரட்சி புரட்சி என்று வெறும் கருத்துணர்வால் மட்டுமே கூறிக் கொண்டிருக்கும் இக் கால இளைஞர்களை உணர்ந்து கொள்ள வைப்பது, அதைவிட மிகவும் கடினமான செயல்! இற்றை இளைஞர்கள் என்ன நினைக்கிறார்கள் எனில், எதையும் எடுத்த எடுப்பிலேயே எல்லா நிலையிலும் தங்களால் செய்துவிட முடியும் என்று கருதிக் கொள்கிறார்கள். அவர்கள் கருத்துணர்விலும் ஊக்கவுறுதியிலும் பிழையில்லை. அந்தவகையில் அவர்களை நினைப்பது, வேறு யாரை நினைப்பதைவிடவும் நமக்கு மகிழ்ச்சியூட்டுகிறது. ஆனால் இயற்கையான—நடப்பு முறையிலான செயலுணர்வை அவர்கள் அறியாதவர்களாகவே இருக்கிறார்களே என்று நினைக்கும் பொழுதுதான், அவர்கள்மேல் இரக்கமும், வருத்தமும் மேலிடுகின்றன. இதுபோன்ற நூற்றுக்கணக்கான இளைஞர்களைக் கடந்த நாற்பதாண்டுக் காலமாக, பலவேறு கோணங்களில் பார்த்து எடையிட்ட பட்டறிவைக் கொண்டே இக் கருத்தை நாம் சொல்ல முடிகிறது; வலியுறுத்த வேண்டியிருக்கிறது.

கல்லாத ஏழைப் பொது மக்கள் ஆடுகளைப் போன்றவர்கள். அவர்களுக்குத் தற்காலச் சிந்தனைகளே குறைவு. மிகப் பலரிடம் இல்லையென்றே சொல்லி விடலாம். அவர்களிடம் எதிர்காலச் சிந்தனைகள் தோன்றுவதற்கே வாய்ப்பில்லை. அவர்களை யார்

கவர்ச்சிப் படுத்துகிறார்களோ, அவர்களைக் கழுத்தறுக்க விரும்பி, எளிதில் நயம்படப் பேசி ஏமாற்றுகிறார்களோ, அவர்களையே, அவர்கள் வேறு யாரையும்விட மிகுதியாக நம்புகிறார்கள். சந்தனத்தில் ஈக்கள் மொய்ப்பதில்லை; மலத்தில் மிகுதியாகவே மொய்க்கின்றன. பொது மக்களும் அப்படித்தான். கவர்ச்சிக்கே மிகுதியும் ஆட்படுகிறார்கள்! இனி, மலத்திற்கு அடுத்தபடி வெல்லத்திலேயே மிகுந்த ஈக்கள் மொய்க்கின்றன! மக்களும் அப்படித்தான்! தங்களிடம் யார் சுவையாக அல்லது தங்களின் எளிய தேவைகளை நிறைவேற்றுகிறார்களோ, அவர்களிடமே அவர்கள் மண்டுகிறார்கள்! இந் நிலைகளை இளைஞர்கள் எவ்வாறு உருவாக்கிவிட முடியும்?

அவர்களுக்குப் பொய் வராது. புரட்டுத் தெரியாது; கவர்ச்சியாகப் பேசவோ, மக்களை ஏமாற்றவோ அவர்களால் முடிவதில்லை. ஏனெனில், அவர்கள் உண்மையானவர்கள்! உண்மையாகவே மக்கள் தொண்டாற்ற விரும்புகிறார்கள்! மக்களுக்கு நன்மை பயவாத எந்தக் கருத்தையும் செயலையும் அவர்களால் கூறமுடியாது; செய்ய இயலாது. பணத்தைக் காட்டி ஏமாற்றவும் அவர்களால் முடியாது. ஏனெனில் பணத்துக்கு அவர்கள் எங்கே போவார்கள்? தம் மெய்யான தொண்டுக்கே அவர்கள் அரைப்பட்டினி, கால்பட்டினி கிடக்க வேண்டியுள்ளது. முழுநேர உணவை உண்பதே அவர்களால் முடியாது. கிடைக்காது என்பதில்லை. கிடைத்தாலும் உண்மையான மக்கள் நல உணர்வே நெஞ்சில் நிறைந்திருப்பதால், பல்லாயிரக் கணக்கான ஏழை மக்கள் இராப்பட்டினி, பகல் பட்டினியாய் இருக்கும் பொழுது, தாங்கள் மட்டும் எப்படி நிறையுணவாக உண்பது என்று எண்ணி, அதை ஒரு குற்றவுணர்வாகவே கருதுகிறார்கள். இந்த நிலையில் ஏழை மக்களை அவர்களால் எவ்வாறு கவர்ந்திழுக்க முடியும்? எவ்வாறு அவர்களைத் தங்கள்பால் நம்பிக்கை கொள்ளச் செய்ய முடியும்? ஏழையான தலைவன் மேல் மக்கள் மதிப்பு வைக்கிறார்கள்; ஆனால், அவர்கள்மேல் நம்பிக்கை வைக்க மறுக்கிறார்கள். அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது என்றே நினைக்கிறார்கள். எனவே ஏழைகளிடத்தில் ஏழையர் சொற்கள் நம்பப் படுவதில்லை.

> நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
> சொற்பொருள் சோர்வு படும்!

நம்பிக்கையின் அடிப்படையில்தான் ஏழை மக்கள் ஒன்று கூடுவார்கள். அவ்வாறு நம்ப வேண்டுமாயின் அவர்களுக்கு சிறு சிறு உடனடி உதவிகள் தேவை. பண வகையிலோ அவர்களின் வாழ்க்கை வகையிலோ யார் தங்களுக்கு ஒரு சிறு அளவிலாகிலும் நலன்களைச் செய்கிறார்களோ, அவர்கள் மேலேயே இவ்வேழைப் பொதுமக்கள் நம்பிக்கை வைத்து, அவர்களுக்குக் கண்களை மூடிக்கொண்டு ஆதரவு தருகிறார்கள். இதை இன்றைய இளைஞர்களோ அல்லது உண்மையாக மக்கள் நலம் நாடுபவர்-

களோ கட்டாயம் செய்து கொள்ள முடியாது. இவர்களின் உண்மையான முயற்சிகளால் எங்கோ எப்பொழுதோ கிடைக்கப் போகும் ஒட்டுமொத்தமான இன நலத்திற்கு இப்பொழுதைய நிலையில் இவர்கள் தங்களின் கண்முன்னர் கிடைக்கும் சிறுசிறு நலன்களை விட்டுவிட விருப்பம் கொள்வதில்லை. எனவே சிறிய அளவில் செய்யப்படும் நலன்களுக்கே இவர்கள் தங்களை ஒட்டு மொத்தமாக இழந்துவிட அணியமாக இருக்கிறார்கள். இந்த நிலையில் இவர்களை ஒன்றுசேர்ப்பது எங்ஙன்?

மேலும், இவர்களை ஒன்றுபடுத்துவதற்குத் துணைகளாக நிற்கும் முகாமையான உள்ளத்தின் உணர்வுகள் இரண்டு. ஒன்று சாதி; இரண்டு மதம். இவற்றுக்குப் பின்னர்தான் மொழி-யுணர்வும் இனவுணர்வும் நாட்டுணர்வும் செயல்பட முடியும். எனவே, முதலில் பணம், அதற்கடுத்தது சாதி, அதற்கும் அடுத்-தது மதம்—என்றவாறு உள்ள இம் மூன்று ஆற்றல்களினின்றும் இவர்களைச் சிறிதே பெயர்த்தெடுப்பதும் மிகமிகக் கடினமாகவே இருக்கிறது. இம் மூன்று உணர்வுகளும் நம் நாட்டின் பெரும்-பான்மையான ஏழை மக்களை இறுகலாகக் கவ்விப் பிடித்திருக் கின்றன. நூற்றுக்கு நூறு முயற்சி செய்தாலும், இவ்வுணர்வுக ளினின்று இவர்களை மீட்டெடுப்பதே இயலாததாகின்றது. பணத்துக்கு மசியாதவன் சாதிக்கு மசிகின்றான். சாதிக்கு வயப்-படாதவன் மதத்திற்குக் கட்டாயம் வயப்படுகிறான். இவ்-விரண்டிற்கும் ஆட்படாதவன் கட்டாயம் பணத்திற்கு மயங்கியே வீழ்கிறான். இம் மூன்றையும் வேண்டாம் என்று சொல்பவன் எவனும் தமிழகத்தில் இருக்க முடியாது. மாந்தனுக்குத் தேவை-யான அனைத்து வாழ்வியல் கூறுகளும்இம் மூன்றினுள்ளேயே அடங்கி விடுவதாகக்கூட கூறிவிடலாம்.

பணம் இல்லாவிட்டால் நடைமுறை வாழ்க்கை படுதோல்வி-யடைந்து விடுகிறது. கல்லாதவனுக்கு மட்டுமன்று, கற்றவனுக் கும் பணம் இன்றியமையாததாகின்றது. பணம் இல்லாதவன் பிணமென்றே சொல்லப் பெறுகின்றான். இனி பண நிறைவு பெறப்பெற சாதியுணர்வும் மதவுணர்வும் இன்னும் கூடுதலாகின்-றன. இதை நேரிடையாக நடைமுறையிலேயே பார்க்கலாம். பணமுடையவனுக்கு அதைப் பாதுகாக்க உறவும் சாதியும் கட்-டாயம் தேவைப் படுகின்றன. பணத்தை வைத்திருப்பதால் ஒருவன் முதல் மதிப்புப் பெறுவதும் தன் உறவினர்களிடமும் சாதியார்களிடமும்தான்! பிறகுதான் அயலார் அவனை மதிக்கி-றார்கள். பணம்தான் ஒருவனைத் தன் உறவினரிடமும் சாதியாரிட மும் ஒட்டிக் கொள்ளும்படி செய்கிறது. அவர்களும் இவன் விரும்பாமலேயே போனாலும்கூட அவனிடம் வந்து இணைந்து கொள்ள மிகவும் விரும்புகிறார்கள். இனி, அவனைச் சாதிக்கு அடுத்தபடி மதம் காக்கிறது. சாதியின் எல்லையைத் தாண்டிய வுடன் மதம் ஒருவனை ஆட்கொள்ளத் தன் கைகளை அகல விரித்-துக் கொண்டு முன்வருகிறது.

இந் நிலையில், புரட்சி செய்யப் புறப்படுகின்ற இளைஞர்களுக்கோ, அவர்களின் இயக்கங்களுக்கோ இடையூறாக உள்ள நடைமுறைக்கேடு என்னவென்றால், இவர்கள் யாரைக் கொண்டு இந் நாட்டில் ஒரு புரட்சியை உருவாக்க விரும்புகிறார்களோ, அவர்களுக்கு மிகவும் உகப்பானவையாக உள்ள பணம், சாதி, மதம்—இம் மூன்றையுமே புரட்சியாளர்கள் ஒதுக்கித்தள்ள விரும்புவதுதான். இம் மூன்றுமே இன்றைய இளைஞர்களுக்குப் பிடிப்பதில்லை. இங்கு விரும்புவது—பிடிப்பது என்பதை நாம் ஒரு குறையாக எண்ணிச் சுட்டுவதாகக் கருதிவிடக் கூடாது. ஒரு கருத்துணர்வாகவே இதைச் சுட்டுகிறோம். ஆனால் உண்மை என்பது வேறு. அஃதென்னவெனில் உண்மையான மக்களின் மறுமலர்ச்சியே, இந்நாட்டு மக்கள் முன்னேறுமைக்கு அடிப்படைக் காரணங்களாக இருக்கும் இம் மூன்றையும் அக்கு-வேறாய் ஆணிவேறாய்த் தகர்த்தெரிவதில்தான் இருக்கிறது என்பதே! ஆனால், இச் செயல் கட்டாயமாகச் செய்யப்பட வேண்டும் என்பது வேறு; நம்மால் அதை முழுமையாகச் செய்ய முடியுமா என்பது வேறு!—இதைத்தான் நாம் நன்றாக—மிக நன்றாக—இயலுமானால் எல்லாவற்றிலும் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏனெனில், நம் இளைஞர்களுக்கு இருக்கும் வலிந்த உணர்வு எதையுமே செய்துவிட முடியும் என்பதுதான்! செய்ய முடியாததென்பதே நெப்போலியனது அகராதியில் மட்டுமன்று; இவர்களின் அகராதியிலும் இருப்பதில்லை, இந்த உணர்வு நல்லதுதான்; நாம் வரவேற்கக் கூடியதுதான்; இன்னுஞ் சொன்னால் நாம் மதித்துப் போற்றக் கூடியதுதான்! ஆனால், ஒன்றை நம்மால் முடியுமா முடியாதா என்று சிந்தித்துப் பார்ப்பதே தவறாகாது; நம் மெலிவாகிவிடாது; நம்மைக் கீழிறக்கம் செய்து கொள்வதாகவும் ஆகிவிடாது; ஏனெனில்,

> உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
> இடைக்கண் முறிந்தார் பலர்.

—என்று ஊக்க அளவுக்கும் எல்லையும் இயன்மையும் கண்ட பேரறிவாளர் நம் முன்னோர்.

பொருளாற்றலைப் போல் மாந்த ஆற்றலும் ஒருவகை ஆற்றலே. பொருளாற்றல் பொருள் அளவை அடிப்படையாகக் கொண்டது. மாந்த ஆற்றலான அவனுடைய உடல், உள்ளம், அறிவு ஆகிய மூவகை ஆற்றலையும் அடிப்படையாகக் கொண்டது. ஒருவன் ஒரு செயலைச் செய்ய எண்ணும்போதும் விரும்பும் போதும் உள்ளத்தின் ஆற்றல் செயல் படுகிறது. அந்நிலை முடிந்து, அவன் அச் செயலைச் செய்கையில் அல்லது செய்து கொண்டிருக்கையில் அவனுடைய அறிவாற்றலும் உடலாற்றலும் மாறி மாறிச் செயல்படுகிறது. இனி, இவ்வாறு செயல்படும் இவ் விரண்டு ஆற்றல்களுக்கும் தேவையான ஊக்கியாக உள்ளத்தினது ஆற்றலும் உடனாகவே செயல்படுகிறது. எனவே, இம் மூன்று ஆற்றல்களின் அளவுகளை வைத்துத்தான் எந்த ஒரு

செயலும் நடைபெறுதல் வேண்டும். இவ் வகையில் பொருளுக்கும் மாந்தனுக்கும் செயலளவில் என்ன வேறுபாடு என்றால், பொருளை மாந்தன் அளவிட்டு அந்த அளவுக்குத் தக்கபடி அதன் ஆற்றலைத் தான் விரும்பிய வகையில் வெளிக் கொணர முடியும். மாந்தன் மின்சாரத்தைக் கண்டதும், பின்னர் அதை ஒளியாகவும், இயக்கியாகவும் பயன்படுத்தியதாகும் அது. ஆனால், மாந்தனுடைய ஆற்றலை அவனேதான் கண்டு கொள்ள முடியும்; அளவிடவும் முடியும். ஒரு மாந்தனின் ஆற்றலை இன்னொரு மாந்தன் காணவும் முடியாது; அளவிடவும் முடியாது. ஒரு செயல் ஒரு பொருளால் செய்ய முடியும் என்று மாந்தன் கருதுவதைப் போல், ஒரு செயலை ஒரு குறிப்பிட்ட ஒருவனை வைத்துச் செய்துவிட முடியும் என்று எவரும் கண்டுகொள்ளவும் முடியாது; அளவிடவும் முடியாது. இனி, அதைவிட இன்னும் நுட்பமானது, ஒருவனுடைய ஆற்றலை அவனாலேயே கண்டுகொள்ள முடியாது என்பது.

ஒவ்வொருவனும் தன் ஆற்றலை தன் உள்ளத்தின் உணர்வை வைத்தே முதலில் எடையிட்டுப் பார்ப்பான்; அடுத்துத்தான் அதை அறிவால் எடையிடுவான்; இனி, அதற்கடுத்துத்தான் அதை உடலால் எடையிட்டுப் பார்ப்பான்.

ஒரு பெருங்கல் நம் வழிநடைக்குத் தடையாயிருக்கிறதென்று கண்டால், அதை அப்புறப் படுத்த வேண்டும் என்பது மனவுணர்வு. எனவே மனவாற்றலைப் பொறுத்தது அதன் வலிமை. பின், அதை எப்படி, எந்தப் பக்கம், எந்த முறையில் அப்புறப் படுத்த வேண்டும் என்பது அறிவுணர்வு. இது, அவனவன் அறிவாற்றலைப் பொறுத்தது. இனி, அப்புறப் படுத்தும் செயலில் ஈடுபடுவது உடலுணர்வு. இச் செயல் வெற்றியுடன் செயல் படுவதும் படாததும் அவன் உடலாற்றலைப் பொறுத்தது. உடலால் முடியாது என்று, முயன்று பார்த்தபின் மனம் உணர்ந்து கொண்டால், அதை ஒரு கருவியால் செய்யவேண்டும் என்று தேர்வது அறிவுணர்வு. பின்னர் அவ்வுடல் மேலும் பெருகிய ஆற்றலுடன் இயங்க வேண்டும் என்று ஊக்கப் படுத்துவது மன ஆற்றலைப் பொறுத்தது. இவ்வாறு மனம், அறிவு, உடல்— மனம், அறிவு, உடல் என்று மாறிமாறி ஆற்றல்கள் பொருளின் மேல் சென்று செயல்களாக மலர்கின்றன. இவ்வாறு நிகழ்வது இயக்கம்.

எனவேதான் ஒருவனுடைய முழு ஆற்றலையும் அதன் அளவையும் ஒருவன் மனவுணர்வு தோன்றியவுடனேயே எடையிட்டுவிட முடியாது. ஒருவன் ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று மனத்தால் எண்ணியவுடனேயே, அதைச் செய்துவிட முடியும் என்று வெறும் மனவுணர்வு கொண்டு மட்டுமே சொன்னால், அது செயலுக்குப் பொருத்தமாக ஆகிவிடாது. அதை அறிவும், உடலும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

'சென்ற விடத்தான் செலவிடாத் தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு'

—என்னும் திருக்குறளிலும் இவ்வுண்மையைக் காண்க. அதனால் தான் மூன்னர் கூறிய திருக்குறட் பாவில் தம்வலி யறியார் என்று பேரறிஞர் கூறினர். அதில் ஊக்கம் வெறும் மனவூக்கமே. எனவே மனவூக்கம் தோன்றியவுடனே அச் செயல் நடந்து விடும் என்பது சரியன்று, அவ்வாறு மனவூக்கம் கொண்டவர்களில் பலர் ஒரு செயலில் ஈடுபட்டு இடைமுறிந்து போனவர்கள் என்பது அக்குறட்பா. இனி, இக் கட்டுரைக் கருத்துக்கு வருவோம்.

நம் நாட்டில் பொதுமக்களைப் புரட்சிக்குத் தட்டியெழுப்பத் தடையாயிருக்கின்ற கூறுகள் மூன்று என்றும் அவை பணம், சாதி, மதம்—என்பவையே என்றும் கண்டோம். இம் மூன்று கூறுகளும் பெரும்பாலும் நம்மோரன்ன எல்லாராலும் பேசப் பெறுபவையே என்று கண்டாலும், எல்லாரும் அக்கூறுகளின் உண்மையான வலிவாற்றல்களை உணர்ந்துகொண்டுதாம் பேசுகிறோம் என்று கருதிவிடக் கூடாது. ஆயிரத்தில் ஓரிருவர் கூட, இவற்றின் ஆற்றல்களை உண்மையாக உணர்ந்து கொண்டார்கள் என்று கூறிவிடமுடியாது. பண ஆற்றலை அடக்கியாள்கிற ஆற்றல் உள்ளவர்கள் இவ்வுலகில் மிக மிகக் குறைவாகவே இருப்பர். 'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' என்பது குறட் பேரறிஞர் கூற்று. அறிவை 'நின்ற ஒளி' என்று சொன்னவர், பொருளைப் 'பொய்யா விளக்கம்' என்கிறார். ஒளியும் விளக்கில்தான் நிற்கும் என்பது இதன் நுண் பொருள். இனி, பொருளைவிட சாதி வலியது; பொருளினால் சாதியை அழிக்க முடியாது ஆகலின். இனி, சாதியைவிட மதம் வலியது; சாதியையாகிலும் ஒழிக்க முடியும்; மதத்தை ஒழிக்கவே முடியாது ஆகலின். இனி, பொருளும், சாதியும், மதமும் ஒன்றோடொன்று இணைந்து வலுப்பெறுகின்ற கூறுகள் பணத்தொடு சாதியும், சாதியொடு மதமும், மதத்தொடு பணமும் சேரும் பொழுது ஒவ்வொன்றுக்கும் இரட்டை வலிவு கிடைக்கும். பணம் உள்ளவன் சாதியை விடான்; சாதியுள்ளவன் மதத்தை விடான். வெளிக்கு விட்டதுபோல் பேசினாலும் உள்ளுக்குள் அவை மறைந்திருந்து இணையும்தன்மை உடையன. இனி, இன்னொரு தன்மை என்னவென்றால் இம் மூன்றையும் ஒருங்கே ஒழிப்பதும், ஒன்றினின்று ஒன்றைப் பிரித்து அழிப்பதும் இயலவே இயலாது. கதிரவப் புள்ளிகள் போல், மூன்றில் ஒன்று வலுவறினும், மற்றைய இரண்டும் அவ்விழப்பை விரைவில் ஈடுகட்டும் தன்மையுடையன. வெட்ட வெட்டத் துளிர்க்கும் முள்மரம் போல், இவை தீர்வதுபோல் தீராதவை. மாந்த மனத்தில் ஆழமாக வேரூன்றிக் கிடப்பவை. இவை மூன்றின் வலிவையும் ஆழமாக வேர்கல்லி அகழ்ந்தெடுத்து அகற்றுவது அரிதினும் அரிதாகும். பொருள் உடல் போன்றது; சாதி மனத்தில் குடிகொண்டது; மதம் அறிவைத் தின்பது.

# செய்திகள்

## 1. திருவள்ளுவர் மன்றம் - ஐயை - பாவியத்திறனாய்வு --கோயில்பட்டி :

கடந்த 26-4-87 மேழம் 13 ஆம் பக்கல் ஞாயிறு காலை 10-30 மணியளவில், கோயில்பட்டி, திருவள்ளுவர் மன்றம் சார்பில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் அருந்தமிழ்ப் பாவியமாகிய ஐயை-யின் திறனாய்வுச் சொற்பொழிவு நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மன்றத் தலைவர் தலைமை தாங்கினார். ஐயை—பாவியத் திறனாய்வை ஏறத்தாக 2 மணிநேரம் மன்றத் துணைத் தலைவர் திரு. ஆ. முத்துராமலிங்கம் அவர்கள் நிகழ்த்தினார். அவையோர் இறுதிவரை அமைந்திருந்து கேட்டது பெரிதும் வியக்கத்தக்கது. பாவலரேறு அவர்கள் நிகழ்ச்சிக்கு நேரில் வந்திருந்ததுடன், இறுதியில், விளக்கமாக ஓர் அரைமணி நேரம் உரையும் நிகழ்த்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

இனி, இந்தியாவைப் பொறுத்த மட்டில், பணம் முதலாளியக் கூறுகவும், சாதியும், மதமும் பார்ப்பனீயக் கூறுகளாகவும் மிகவும் செழித்தோங்கி வளர்ந்து நிற்பன. இற்றைக் காலத்தில் இவ்விரு இனவியல் கூறுகளும் அரசியல் என்கின்ற வலிவான மக்களியல் கூறுடன், இணைந்து இறுகிப் பின்னிப் பிணைந்து மண்டி வளர்ந்து வளம்பெருக்கி நிற்கின்றன. இந் நிலையைச் சிறிதே அசைப்பதானாலும் அதற்குப் பெருமுயற்சியும் பேரறிவும் பேராற்றலும் தேவை. பனிமலை போல் வளர்ந்துள்ள இவ்வாற்றல்கள் கல்லாத மக்கள்தம் நெஞ்சங்களில் பயிராகி வளர்கின்றன. இந்நிலையில் அவர்கள் உள்ளங்களில் புரட்சித் தீப்பற்றுதல் அரிதினும் அரிதாகும். அவ் வரிய செயலை இற்றை இளைஞர்கள் செய்ய முற்படுவதானால், அவர்களின் மனவாற்றலும் அறிவாற்றலும் உடல்திண்மையும் பெருகி வளர்ந்திருத்தல் வேண்டும்.

அவர்களுடைய மனத்தில் ஆசை பாசங்களும், விருப்பு வெறுப்புகளும், உறவு ஊற்றங்களும் அறவே கழன்று வெறுமையுற்றிருக்க வேண்டும். அவர்களுடைய அறிவில் வேறுபாட்டுணர்வுகளும், கொள்கை வளைவுகளும், செயல் மாறுபாடுகளும் துளிர்க்கவே கூடா. அவர்களின் உடல்கள் உறுதியும் முருக்கமும் உற்றுத் தளர்வும் சோம்பலும் நோய்களுமின்றித் தறுகணும் பீடும் நிரம்பியவனவாய் இருத்தல் வேண்டும். இற்றை இளைஞர்கள் அவ்வாறுள்ளனரா? எண்ணிப் பார்த்துச் சொல்லுங்கள்!

(தொடரும்)

## 2. இலக்கிய வீதியின் இலக்கியவிழா, திருக்கழுக்குன்றம்.

இலக்கிய வீதியின் இலக்கிய விழா தி. வ. ஆண்டு 2018 விடை (வைகாசி) 3 (17-5-87) ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணி அளவில் திருக்கழுக்குன்றம் மலையடிவார மண்டபத்தில் நாகசுர நல்லிசையுடன் தொடங்கியது.

இலக்கிய வீதியின் அமைப்பாளர் இனியவன் அனைவரையும் அன்புடன் வரவேற்றுப் பேசினர்.

காலை 10 மணியளவில் நினைவுக் கலை ஏந்தல் மறைந்த திருக்குறள் இராமையாவின் மகன் திரு. கனகசுப்புரத்தினம் அவர்களின் "பதின்கவனக அரங்கேற்ற" நிகழ்ச்சிக்குத் திருக்குறள் மணி க. த. திருநாவுக்கரசு அவர்கள் தலைமை தாங்கினர்கள். பதின்கவனக நிகழ்ச்சியைத் தம் தந்தையைப் போலவே திரு. கனகசுப்புரத்தினம் மிகவும் சிறப்பாக நடத்திக் காட்டி அனைவரின் பாராட்டுதலையும் வாழ்த்துதலையும் ஏற்ருர்.

பல அமைப்புகளும் பொது மக்களும் உரு. 1143/-உம், முன்னாள் அமைச்சர் ஆனூர் செகதீசன் அவர்கள் உரு. 500/-உம், ஆகமொத்தம் உரு 1643/- நன்கொடையாகவும், மற்றும் பலாப் பழம் ஒன்றும் கைத்தறி ஆடைகளும் அவரிடம் வழங்கப் பெற்றன.

அடுத்து, வேடந்தாங்கல் சுகுணன் அவர்களின் 'சிறகுகளே போதும்' என்ற பாட்டு நூல் வெளியீட்டு நிகழ்ச்சிக்கு மலாய்ப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டீர். இரா. தண்டாயுதம் தலைமை தாங்கி தகவுரை ஆற்றினர். மணிவாசகர் நூலகத்தின் உரிமையாளர் பேராசிரியர் மெய்யப்பன் அவர்கள் நூலை வெளியிட்டு நகைச்சுவை விருந்து வழங்கினர். முதல் நூலை திரு. எசு. கருணாகரன் பெற்றுக் கொண்டார். நூலாசிரியர் வேடந்தாங்கல் சுகுணன் அவர்களின் ஏற்புரையுடன் முற்பகல் நிகழ்ச்சி பிற்பகல் 2.15 மணிக்கு நிறைவு பெற்றது.

வள்ளல் ஆனூர் செகதீசன் அவர்கள் பகல் உணவு அனைவர்க்கும் ஆய்வு மாளிகையில் வழங்கினர்கள்.

பிற்பகல் நிகழ்ச்சி மாலை 6 மணிக்கு அண்ணு பூங்காவிலிருந்து ஊர்வலத்துடன் தொடங்கியது. பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், புலவர் இந்திரபீடம் வே. த. அர்ச்சுனனர், பாவலரேறு பெருஞ்சித்திரனர் ஆகியவர்கள் சுவடிக்கப் பட்ட தேரில் அமர்ந்து வந்தனர். பல்லியங்களுடன், மேள தாளங்கள் முழங்க, வாணவேடிக்கைகளுடன் ஊர்வலம் கடைத் தெரு வழியாக இரவு 7 மணிக்கு மலையடிவார மண்டபத்தை அடைந்தது.

அமைப்பாளர் இனியவன் அனைவரையும் வரவேற்ருர். பன்மொழிப் புலவர் பாராட்டு நிகழ்ச்சிக்கு மதுரைக் காம-

ராசர் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் பர். வ. சுப. மாணிக்கம் அவர்கள் தலைமை தாங்கினார்.

'இந்தப் பாராட்டு விழாவுக்குத் தலைமை தாங்குவதைப் பெருமையாகக் கருதுகின்றேன். தமிழ் மொழியும் தமிழ் இலக்கியங்களும் நம்முடைய முன்னோர் நமக்கு வழங்கிய சொத்துகள். தமிழ் மொழியிலிருந்து 500 சொற்கள் சப்பான் மொழிக்குச் சென்று வழங்குவதாகச் சப்பான் மொழி அறிஞர்கள் கூறுகிறார்கள். அவற்றைப் பேணிக் காப்பது தமிழர் ஒவ்வொருவரின் கடமை எனக் கருதுதல் வேண்டும். தமிழ் அறிஞர்கள் எழுதும் நூல்களை வாங்கியும் பாராட்டியும் ஆதரவு தந்தால்தான் அவர்களுக்கு எழுத மனம் வரும். ஒவ்வொருவரும் தம் பெயரின் முதல் எழுத்தைத் தமிழில் எழுதப் பழகிக் கொள்ளல் வேண்டும். இவ்வாறு செய்வது பன்மொழிப் புலவர் அவர்களைப் பாராட்டுவதாக அமையும்' என்று கூறினார்கள்.

பின்பு பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் பன்மொழிப் புலவரைப் பாராட்டிப் பேருரை ஆற்றினார்கள்.

'தமிழ் அறிஞர்களைக் காலத்தில் பாராட்டும் வழக்கம் வேண்டும். காலங் கடந்து பாராட்டுவதில் பயன் இல்லை. பன்மொழிப் புலவர்க்கு 17 மொழிகள் தெரியும். இப்பொழுது அவருக்கு 81 அகவை ஆகிறது. கண் தெரியவில்லை. இதுவரை 170 நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார்கள். பணம் இல்லாமையால் எழுதியும் வெளியிடாமல் இருக்கும் நூல்கள் ஏறத்தாழ 50.

காலங் கடந்தாவது பன்மொழிப் புலவர் பாராட்டு விழாவிற்கு இலக்கிய சுவைஞர் ஆனூர் செகதீசன், 'இலக்கிய வீதி' அமைப்பாளர் இனியவன், செயலர் பாவலர் பல்லவன் ஆகியவர்களைப் பாராட்டுகின்றேன். பன்மொழிப் புலவர் எழுதி வெளிவராத நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்குரிய முயற்சிகளை வள்ளல் ஆனூர் செகதீசனும் மற்றவர்களும் மேற்கொள்ள வேண்டுகின்றேன்.

ஆனூர் செகதீசன் அவர்களுக்கு இளமையிலேயே தமிழ் மொழி உணர்வையும் இன உணர்வையும் ஊட்டி உருவாக்கித் தந்த அவருடைய ஆசிரியர் புலவர் இந்திரபீடம் வே. த. அர்ச்சுனனார் அவர்களையும் பாராட்டுகின்றேன். தம்முடைய ஆசிரியரின் இருப்பிடத்தைத் தேடிக் கண்டுபிடித்து அழைத்து வந்து பாராட்டுகின்ற ஆனூர் செகதீசன் அவர்களின் பண்பு பாராட்டவும் பின்பற்றவும் தக்கது' என்று தமது பாராட்டுரையில் பாவலரேறு பகர்ந்தார்கள்.

முன்னாள் அமைச்சர் ஆனூர் செகதீசன் பன்மொழிப் புலவர்க்கு உரு. 2500/- உம், தம் ஆசிரியர் புலவர் இந்திரபீடம் வே. த. அர்ச்சுனனார்க்கு உரு. 1000/-உம் பழங்களும் புத்தாடைகளும் வழங்கிச் சிறப்புச் செய்தார். பல பொது அமைப்புகளும்

பொதுமக்களும் புலவர் பெருமக்களுக்குப் புத்தாடை அணி-வித்துச் சிறப்பித்தனர்.

பின்னர் வழக்காடு மன்றம் தொடங்கியது. 'சக்தி பைனான்சு லிமிடெட்' பொது மேலாளர் பேராசிரியர் கண. சிற்சபேசன் நடுவர் பொறுப்பு ஏற்றார்.

'சங்கப் புலவர்கள் போரைத் தூண்டிய குற்றவாளிகள்' என்ற வழக்கை திருவாட்டி உமையாள் முத்து தொடுத்தார்.

தமிழ் வளர்ச்சி இயக்கக உதவி இயக்குநர் புலவர் த. பெரியாண்டவன் வழக்கை மறுத்தார்.

இறுதியில், கழகப் புலவர்கள் போரைத் தூண்டிய குற்ற-வாளிகள் அல்லர் என்று நடுவர் தீர்ப்பு வழங்கினர்.

இலக்கிய வீதியின் கண்ணிய கருத்தாளர் மதிப்புமிகு பி. எம். முத்துக்குமரப்பா அவர்கள் முற்பகல் பிற்பகல் நிகழ்ச்சிக ளில் கலந்து கொண்டு பாடல் நூல் வாங்கியும் நன்கொடை வழங்கியும் புத்தாடை அணிவித்தும் சிறப்பித்தார்கள்.

இலக்கிய வீதியின் செயலர் பாவலர் பல்லவன் நன்றி கூற லுடன் இரவு 12-30 மணிக்கு இலக்கிய விழா இனிதே நிறை-வுற்றது. செய்தி: வ. வேம்பையன், கல்பாக்கம்.

## 3. பல்லடம் திருக்குறள் விழா.

கடந்த மே. 24-5-87 இல் காலை 9 மணியளவில், பல்லடம், திருக்குறள் மன்றத்தின் சார்பில், 'திருக்குறள் விழா' சிறப்பாக நடைபெற்றது. அறிஞர் கு. ச. ஆனந்தம் தலைமையில் நடை பெற்ற 'பணி ஆய்வரங்க' நிகழ்ச்சிக்குத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்த திருக்குறள் அறிஞர்கள், ஆர்வலர்கள் கலந்து கொண்டு அன்றாட வாழ்க்கைச் சிக்கல்க-ளுக்குத் தீர்வு காணும் வகையில் அனைத்து மக்களுக்கும் திருக் குறள் பயன்படும் வழிமுறைகளை எடுத்துரைத்தனர்.

பிற்பகல் புதுவை, திருக்குறள் பெருமாள் தலைமையில், கோயில்பட்டி திருக்குறள் இராமையா அவர்களின் மகன் இரா. கனகசுப்புரத்தினத்தின் பதின்கவனக நிகழ்ச்சியும், உடுமலை மாணவன் பொன்மணியின் திருக்குறள் கவனக நிகழ்ச்சியும் அனைவரும் வியக்கும் வண்ணம் நடந்தன.

மாலை ஒயிலாட்டத்துடன் திருவள்ளுவர் படம் ஊர்வலமாக நகரின் முகாமையான தெருக்களின் வழியாகக் கொண்டு செல்லப் பெற்றது.

இரவு தென்மொழி. ப. துரையரசன் தலைமையில் நடந்த சிறப்புக் கூட்டத்தில் கு. ச. ஆனந்தம், வேலா. அரசமாணிக்கம், பேரா. வளன்அரசு, சொல்லாய்வறிஞர் ப. அருளி, கேரள 'பகவான் ஆதி திருவள்ளுவர் ஞானமட' நிறுவனர் சிவானந்தர்

ஆகியோர் பேசினர்கள்; பின்னர் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கேரளத்திலிருந்து சிவானந்தர் தலைமையில் பத்துக்குமேற் பட்டவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு திருக்குறள் பற்றி உரையாற்றியது அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது.

இவ் விழாவிற்கு முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவ நாதம், தவத்திரு. குன்றக்குடி அடிகளார், தமிழறிஞர் வ. சுப. மாணிக்கனார் ஆகியோர் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தனர்.

தங்களது சாதி, மத, கட்சி வேறுபாடுகளை விடுத்துத் திருக் குறளை நம்பும் அனைவரையும் ஒன்றுபடுத்த ஏற்பாடு செய்வதும் அதன்மூலம் திருக்குறள் குமுகாயம் ஏற்படுத்துதலும் என்ற நோக்கங்களோடு செயலர் நன்றியுரை கூற விழா மிகச் சிறப்பாக நிறைவுற்றது. செய்தி: மா. ஆறுமுகம், பல்லடம்.

## 4. பாவேந்தர் விழா, புதுச்சேரி.

கடந்த 1-6-87 அன்று திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் புதுச்சேரி, கம்பன் கலையரங்கத்தில், பாவேந்தர் தமிழ் இயக்கத் தின் சார்பில், பாவேந்தர் விழா, திரு. தமிழநேயன்(தலைவர்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தொடக்கத்தில் இசை வாணன் திரு எ. சிவா நந்தம் இயக்கப் பாடல்களையும், தென்மொழிப் பாடல்களையும் பாடினர். இயக்கச் செயலாளர் திரு. கோவி. செந்தமிழன் வரவேற்புரை நிகழ்த்தினர். தலைவர் முன்னுரைக்குப் பின் திரு. மூர்த்திஐயா அவர்கள் பாவேந்தர் படத்தைத் திறந்து வைத்துத் தொடக்கவுரை செய்தார்.

அடுத்து 8 மணியளவில் பாவலரேறு பெருஞ்சித்திரனர் அவர்கள் தலைமையில் பாட்டரங்கம் நடைபெற்றது. அவர்களின் முன்னுரைப் பாடலுக்குப்பின், புலவர். திரு. இறைக்குருவனர் 'பாவேந்தரின் தமிழுள்ளம்' பற்றியும், பாவலர் திரு. சீனு. அரிமாப் பாண்டியன் 'பாவேந்தரின் இனவுணர்வுள்ளம்' பற்றியும், பாவலர் திரு. தமிழியக்கனர் 'பாவேந்தரின் நாட்டுணர்வுள்ளம்' பற்றியும், புலவர் திரு. கலியபெருமாள் 'பாவேந்தரின் இயற்கை ஈடுபாட்டுள்ளம்' பற்றியும், பாவலர் திரு. முல்லைவாணன் அவர்கள் 'பாவேந்தரின் பண்பாட்டுள்ளம்' பற்றியும் பாடல்களைப் பாடினர். இறுதியில் பாவலரேறு அவர்களின் பாமுடிவுரைக்குப்பின் உரையரங்கம் நடைபெற்றது. அதில், திருவாளர்கள் வ. சு. சம்பந்தம், வடிவேல் இராவணன் (உ. த. மு. க. பொதுச் செயலர்) புலவர் ந. தமிழவேள் ஆகியோர் உரை யாற்றினர். இறுதியில் சொல்லாய்வறிஞர் திரு. ப. அருளி அவர்கள் விழா நிறைவுரையாற்றினர். இயக்கப் பொருளர் திரு. சு. தமிழன்பன் அவர்களின் நன்றியுரையுடன் இரவு 11 மணி அளவில் விழா நிறைவுற்றது. ○

# பறம்பை அறிவன் - பக்கம்!

## 1. நொறுகல்!

'நொறுங்கத் தின்றவன் நூறுண்டு வாழ்வான்' என்பதாலோ என்னவோ, நொறுகல் தின்னவும் சிறுதீனி 'மேயவும்' விரும்புகின்றனர். கால ஓட்டத்தோடு படிப்பறிவை ஆழப்படுத்திக் கொள்ள விரும்பாதவர் 'பெட்டி'ச் செய்திகளைப் படித்து 'அறிவு நிரம்பியவர்' போல அரட்டை அடிப்பதை நாம் அறிவோம்.

காய்தல் இருக்கும்; உவத்தல் காணப்படும். ஆய்தல் என்னவோ அருகிக் கொண்டு போகிறது. அதுவும் 'மார்க்சியம்' கற்றவர்களிடம் இப் பண்பு வளர்ந்தால் பெருந்தீங்கே விளையும்.

நாம் 'பொன்னுலகம்' படைக்கப் போராடுகின்றோம். அறிவியல் பார்வையில் அப் பொன்னுலகம் நம் கண்ணில் படவே செய்கிறது; கருத்தினிலும் இனிக்கின்றது. ஆனால் நாட்டின் நிலைமை, வரலாற்று நோக்குடன் ஒரு செய்தியை முழுமையாய்ப் பொருத்திப் பார்த்தல் வேண்டும். பகுதி ஆய்வு தாராளக் கருத்தில் முடிந்து விடலாம்.

தூயதமிழ், தனித்தமிழ் இயக்கம் தோன்றிய பின்புலம், தேவை, பார்ப்பனர் ஆளுமை, வரலாற்றில் புரட்சியை அறிவு வாணிகம் செய்பவர் எப்படித் தடைப்படுத்தவும் திசைதிருப்பவும் செய்தனர் என்பதுபற்றி ஆராய்தல் வேண்டும்.

''தொல்காப்பியர் தூயதமிழர் என்று பலபுலவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் சரியான பார்ப்பனர்; அப்படி இருந்ததனாலே பல ஆரியக் கொள்கைகளைத் தொல்காப்பியத்திலே புகுத்தியிருக்கிறார்''

—பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

''நிலவுடைமைக் கருத்துகளில் ஆரிய நிலவுடைமைக் கருத்தை விடத் தமிழர்கள் நிலவுடைமைக் கருத்துகள் தூயவை; உயர்ந்தவை; தமிழர்கள் வகுப்பு(வர்க்க) வேறுபாடே இல்லாது வளர்ந்துவிட்ட இனம் என்பது போன்ற பொய்ப் பெருமைகளை அவிழ்த்துவிட்டு மேய்ச்சல் நடத்திக் கொண்டிருக்கின்றன சில ஏறுகள். இவர்களில் ஒருவர்தானே பாவலரேறு''

—'மனஓசை' சாட்டை, சனவரி'84.

மனஓசை, 'இனம்', 'இனச்சிக்கல்' போன்ற உண்மைகளை 'இல்லை' என்று மறுக்கின்றதா?

இனப்பண்பாட்டின் அடிப்படைக் கூறுகளைப் பற்றி 'மன ஓசை' கருதுவது யாது?

ஆரிய இனம்... இன்றுவரை 'சாதி', வருணாசிரமம் பற்றிக் கொண்டுள்ள கருத்துகள் தமிழினம் அதற்காட்பட்ட வரலாற்று மயக்கங்கள், எதிர்த்து வளர்ந்து வந்த பண்பாட்டுக் கருத்துகள் பற்றி மனஓசை யாது கூறப் போகிறது?

இன ஒடுக்கலை எதிர்த்து நடந்த வரலாற்றுக் கூறுகள்—'பார்ப்பான்' ஆக்கிய கொள்கைகள்—பற்றி 'மணஓசை' சிந்தித்தல் வேண்டும். இனப் போராட்டம், வகுப்புப் போராட்டத்தின் ஒரு கூறுகும். அதனை முழுமையாகப் பார்ப்பதில் பெருஞ்சித்திரனார் செய்யும் தவறு யாது? என ஆராயாமல், 'மேய்ச்சல்' 'காய்ச்சல்' எல்லாம் வேண்டாம்!

'புதிய பார்ப்பான்' என்ற அளவில்கூடத் 'தொல்காப்பியன்' ஆரியக் கருத்துகளுக்கு அடிப்பட்டிருத்தல் கூடும்! 'வசை' பாடுதல், வரட்டிய மார்க்சியம் பேசுதல் இரண்டும் வெவ்வேறு ஆகாதென்றே கருதுகின்றேன்.

## 2. மே நாள் யார் கொண்டாடுவது?

உலகில் உள்ள தமிழர் எல்லாம் ஓரினவுணர்ச்சி பெறுதல் வேண்டும். ஏன்? தமிழினப் பெருமை, பண்பாடுகளை அயலகங்களில் பரப்பி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், தங்களின் சிந்தனை வாயிலான மொழியை—தமிழை—மறந்து வரும் நிலைமை உள்ளது. பண்பாடு சார்ந்த பழக்க வழக்கங்கள் மட்டும் நீடித்து வருகின்றன. அவையும் மேல்நாட்டுப் போக்கோடு செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன.

நாம் தமிழ்நாட்டில் வாழும் அவலம் சொல்லும் தரம் அற்றது. சாதியின் பிடியுள் அகப்பட்டும், பணத்தின் உறவுக்குள் சிக்கியும் நாம் அலைகின்றோம்! எத்துணை அறிவு முயற்சிகள் இருந்தாலும் பணம்—சாதி இரண்டும் இங்கே செயல்பட்டு அவற்றை முறியடித்துப் போடுகின்றன! பணவலிமையை வென்றிடலாம்—சாதி அங்கே குறுக்கிட்டு உழைப்பாளரை ஒன்றிணைய விடாமல் 'பணத்திற்கு' மறுதலையாய் நின்று ஆதரவு செய்வதையே நாம் காண்கின்றோம். எனவே, தமிழன் உயர்தல் என்பது பாட்டாளியத் தலைமையாலேயே முடியும்!

நாம் தமிழின ஒற்றுமையை உருவாக்குவதென்பது, இன விடுதலையை அடிப்படையாகக் கொண்ட போராட்டத்தால் மட்டுமே இயலும். ஆயினும், அவ் விடுதலை உழைக்கும் மக்களின் தலைமையின்றி இயலாததாகிவிடும்.

101 ஆவது மே நாளை இராசீவ்காந்தி தமிழ்நாட்டில் வந்து கொண்டாடினார். 'மூப்பனாரும்', மா.கோ.இரா.வும் மே நாளைக் கொண்டாடுவது... மே நாள் பெருமையை மக்கள் உணர்ந்து விடுதலைப் போரில் இறங்கிவிடக் கூடாதென்பதன் பொருட்டெனலாம்! ஆக, வகுப்புப் போர் நடத்தாமல் நம்மின விடுதலையும் நமக்கு வாயாது போகும்? இதனை ஆராயாமல் அங்கங்கே நடக்கும் 'வகுப்புப் போராட்ட' வடிவங்களைப் புறக்கணிக்கின்றனர். அவற்றைக் கடந்து 'ஒன்றுபடுவோம்! என்று கூக்குரல் போடுகின்றனர். அவை 'மெய்'யாகவே 'இல்லை' என்பதுபோலப் பேசுகின்றனர். இவை கூர்மையடையாமல் போக, இப் புறக்கணிப்பு காரணமாகிவிடுகிறது. ○

# இந்தியத் தேசிய இனங்களின் விடுதலை எழுச்சிகள்!

-- தென்மொழி கரிகாலன்.

இவர்களின் ஆட்சியில் பொருளியல் துறையில் தமிழ்க் குமுகாயம் எந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறது? பொருளியல் வளர்ச்சியில் தமிழ் மக்களின் வாழ்வியலில் வறுமை ஒய்ந்ததா? எத்தனைப் படிகள் வளர்ச்சி பெற்று வளமாக வாழ்கிறான் என்று நாம் இன்றையக் குமுகாயப் பொருளியலில் தனிமாந்தனின் வாழ்வைப் பிரித்துப் பார்த்தால், தமிழ் நிலத்தில் 100-க்கு எழுபது விழுக்காடு மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ்தான் வாழ்ந்து வருகிறார்கள் என்பதைப் பொருளியல் அறிஞர்கள் புள்ளி விளக்கங்களுடன் குறிப்பிடுகிறார்கள்.

ஆண்டுக்கு எட்டாயிரம் கோடி உருபாவுக்கு மேல் தில்லியரசு தண்டிச் செல்கிறது. எனினும் எல்லாத் துறையிலும் தமிழ்நாடு வஞ்சிக்கப் படுகிறது. தமிழர்களுக்கு இத்தகு நிலைமைகளுக்கு காரணம், தமிழ்நாடு தில்லியின் ஆளுமைக்குக் கீழ் ஆளப்படுவதும், தமிழினம் வடநாட்டுக்கு அடிமையாக இருப்பதுமே; அன்று வெள்ளையனுக்குத் தமிழ்நாடு சந்தைக்காடாக இருந்தது, இன்று வடநாட்டு வணிகப் பார்ப்பன முதலைகளுக்கு சந்தையாக்கப் படுகிறது.

1937-ஆம் ஆண்டு தேர்தலின்போது சென்னை மாகாணத்தில் பேராயக் கட்சி ஆட்சிக்கு வந்தது. இராசாசி-சென்னை மாகாண முதலமைச்சர் பொறுப்பேற்றதும் அவர் செய்த முதல் திருப்பணி, தமிழகப் பள்ளிகளில் இந்தியைப் புகுத்திக் கட்டாயப் பாடமாக்கிய நிகழ்ச்சி. அன்றைய நிலையில் நம் தாய் நிலம், தமிழ்நாடு, நிசாம் பகுதிகள் நீங்கலாக ஆந்திர மாநிலம், கர்நாடகாவின் சில பகுதியில், கேரளாவின் சில பகுதிகள் சேர்ந்தவையே அன்றைய சென்னை மாகாணம். அந்தச் சென்னை மாகாணத்தில் தமிழகம் இந்தியை எதிர்த்துப் போர்க் கோலம் பூண்டது. அன்றைய இந்தி எதிர்ப்புப் போருக்கு தலைமை தாங்கியவர், நம் அருமைத் தலைவர் தந்தை பெரியார் அவர்கள். அன்றைய களத்தில் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, திரு. வி. க., மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், நீலாம்பிகை அம்மையார் இன்னும் பலர் தலைவர்கள், அறிஞர்கள் முதலானவர்கள் களத்தில் நின்றார்கள்.

திருச்சியில் தந்தை பெரியார் தலைமையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில்தான் முதன் முதலாகத் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அந்த தீர்மானத்தைத் தமிழ்நாடு முழுவதும் பட்டி தொட்டிகள் முழுவதும் பரப்பினார்கள். 1937-ஆம் ஆண்டே தமிழன் தனக்கு நாடு வேண்டும் என்று கேட்கத் தொடங்குகிறான். இந்த 50 ஆண்டுக்

காலமாகத் தமிழனுக்கு நாடு கிடைத்ததா? இல்லையே தமிழனுடைய நாடு எங்கே போனது? அது எங்கேயும் போகவில்லை. வடநாட்டானுக்கு அடிமையாக்கப்பட்டது. தமிழர்கள் வட நாடுக்குக் கொத்தடிமை ஆவணம் எழுதப்பட்டு அறிவிக்கப்பட்ட நாள் 1950-ஆம் ஆண்டு, சனவரித் திங்கள் 26-ஆம் நாள். 1937-ஆம் ஆண்டு முதல் 1987-ஆம் ஆண்டு வரை தமிழனுக்கு நாடு கிடைக்காமல் போனதற்குத் தமிழ்நாட்டு அரசியல் இயக்கங்கள்தாம் காரணம். தெலுங்கர், கன்னடர், மலையாளியர் இவர்கள் தம்முடன் வரமாட்டார்கள் என்று பெரியார் அவர்கள் உணர்ந்ததும், தமிழனுக்குத் தனிநாடு கிடைத்தால்தான் தமிழன் மானத்தோடு, தன்மானத்தோடு வாழமுடியும் என முடிவுக்கு வந்தார். தமிழ்நாடு தமிழனுக்கு வேண்டும் என்று கேட்டுத் தன் இறுதி மூச்சு நிற்கும் வரை தனிநாடு கேட்டு வந்தார். தமிழ் மக்களைத் தமிழக விடுதலைக் கோரிக்கைக்குத் தூண்டினர், தந்தை பெரியார். அரசியலில் புகுந்து இறுதி வரை தமிழனின் உரிமைகளைப் பெறவே போராடினர். தமிழகத்தில் வளர்ந்து விட்ட பேராயக் கட்சி, தி.மு.க. போன்ற இயக்கங்களால் தமிழனின் இன உணர்வு அழிந்துவிடாமல் தமிழன் இன உணர்வு பெறப் பாடுபட்டு வந்தார். 1947-ஆம் ஆண்டு வெள்ளையன் இந் நாட்டைவிட்டுப் போகும்போது தமிழ்நாட்டுக்கு விடுதலை கொடு, தமிழ்நாட்டை இந்திய ஆட்சியில் சேர்க்கக் கூடாது என்று வேண்டுகை கொடுத்தார், வெள்ளையனிடம். அப்படியும் வெள்ளையன் இந்நாட்டைவிட்டு வெளியேறியபோது தமிழ்நாடு இந்திய ஆட்சியில் இணைக்கப் பட்டதைக் கண்டித்து 1947 ஆகசுட்டுத் திங்கள் 15 ஆம் நாள் அன்று தமிழ்நாடு முழுவதும் கருப்புக் கொடி ஏற்றத் தன் கட்சிக்காரர்களுக்குக் கட்டளை இட்டார். அதற்குப் பிறகும் தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடி வந்தார்.

அவருக்குப் பிறகு தமிழ்க் குமுகாயம் தன்னுரிமை பெற்றுத் தன்மானத்தோடும் மானத்தோடும், வளமோடும் வாழ வேண்டும் என்று இரவும் பகலும் அயராது உழைத்து வரும் தலைவர் ஒருவரேதாம். உலக முழுவதும் உள்ள தமிழர்களின் நலன்களையே கனவிலும், நினைவிலும் நினைத்து வரும் தலைவர் "உலகத் தமிழின முன்னேற்றக் கழக" முதல்வர் நமது மதிப்பு மிகு அய்யா பாவலரேறு அவர்கள் ஒருவர்தாம்.

தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் எதற்கு எதற்கோ போராடுகிறார்கள். சிறு சிறு கோரிக்கைகளுக்கும் வடநாட்டுப் பார்ப்பனியத் தில்லியரசோடு போராடுகிறார்கள். இப்படிப் போராடுவதிலேயே தமிழனின் எதிர்காலத்தையே மறைத்து விடுகிறார்கள். தமிழர் தம் உரிமைகள் இழந்து வடநாட்டுப் பார்ப்பனிய அரசிடம் காலமெல்லாம் போராடிக் கொண்டு தங்கள் ஆற்றல்களையே இழக்க வேண்டியதுதான் மிச்சம்.

(தொடர்ச்சி 30-ஆம் பக்கம்)

# கொய்யாக்கனி

நாடக ஆக்கம் : அதியமான்

(பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாவியம்.)

காட்சி—உக (தொடர்ச்சி)

பெ-3: அதனால் என்ன செய்வது என்று சொல்லுகிறார் நம் நண்பர்.

பெ-1: நான் என்ன சொல்லுகிறேன் என்றால்...

பெ-3: (சட்டென்று) நீர் ஒன்றும் சொல்ல வேண்டாம். ஊரில் மழை பெய்யும் வரைக்கும் மக்கள் அனைவரும் செழிப்புள்ள ஊரைத் தேடிப் போய்ப் பிழைத்துக் கொள்ள வேண்டியது தான். வேறுவழி எனக்குத் தோன்றவில்லை.

தலைவர்: உண்மைதான். அதுதான் வழி. மழையைப் பெய்ய வைக்க நம்மால் ஆகாது. அந்த அளவிற்கு அறிவு நம்மிடமில்லை. தண்ணீர் கேட்டுக் கூட்டம் போடுவதும், கத்துவதும் தான் வேலை. இதைத்தவிர நம் நாட்டில் உள்ளோர் செய்தது என்ன? ஒன்றுமில்லை. எனவே மக்களுக்கு வேறு ஊர் சென்று பிழைக்க அறிவுரை கூறுவதுதான் நல்லது. அல்லாக்கால் ஏழை மக்கள் வைத்திருக்கும் ஓலை ஓட்டைக் குடிலையும் இரக்கமின்றிச் செல்வர்கள் பிடுங்கிக் கொள்வார்கள்.

பெ-1: அதுதான் எனக்கும் நல்லதென்று தெரிகிறது. பஞ்சம் வந்தால் பணத்தைப் பெருக்கலாம் என எண்ணிக் கொண்டிருக்கும் பணக்காரர்களுக்குத் தப்பி வெளியூர் போய்ப் பிழைப்பதே நல்லது. வந்ததும் குடிசையாவது மிஞ்சும்,

தலைவர்: நண்பர் கூறுவது உண்மைதான். பஞ்சத்திற்குத் தப்பிப் பிழைக்க வெளியூர் போக மக்களை நான் கேட்டுக் கொள்கிறேன். நாளை எல்லோரும் போகலாம். அதுவே தமிழ்நாட்டின் நடைமுறை வழக்கம். சரி இத்தோடு நான் ஊர் மன்றத்தைக் கலைக்கிறேன்.

(காட்சித் திருப்பம்)

காட்சி—22

உறுப்பினர்கள் : 1. கிழவர்,
2. சிங்கன்.

சிங்: என்ன தாத்தா உறக்கமா? வரலாற்றைக் கேட்டீர்களா?

கிழ: கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். அ'தாவது ஊரில் ஒரே முடிவாக அனைவரும் அயலிடஞ் சென்று பிழைப்பது என்றுமுடிவு கட்டினர்.

சிங்: ஆமாம். இந்தப் பஞ்சத்தில் தத்தளித்தது எங்கள் குடும்பம். தாய்க்கோ தேய்ந்த செருப்புப் போன்ற உடம்பு! தந்தையோ உழைக்க வலுவற்றவர். என் அக்காளின்

கணவர் உணவிற்காக நஞ்சுக் கிழங்கை உண்டு மாண்டார். அவருடைய நினைவிற்கு ஒரு பெண் குழந்தையைப் பெற்றவள். அக்காளும் நானும் ஏதாவது வேலை கிடைக்குமா எனத் தேடி வெளியூர் செல்ல நினைத்தோம்.

கிழ: சிங்கா! நீ சொல்லும் வரலாறு என்னுடையது போலல்லவா தெரிகிறது.

சிங்: இது போன்ற வரலாறுகள் மிகுதியாக உண்டு. அந்த ஊரில் பலரின் வரலாறு இப்படித்தான் வரும்.

கிழ: நீ சொல்வது போல அப்படித்தான்.

சிங்: என் தந்தை இன்று அன்று நாளை ஊரில் மழை பெய்யும் என்று ஊரைவிட்டுப் போக எண்ணமின்றி சொத்தையெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாக விற்றார். பாதிச் சொத்தை வட்டிக்காரன் கொண்டு போனான். கடைசியாக நானும் என் அக்காளும் அவள் குழந்தையையும் தூக்கிக் கொண்டு என் பெற்றோரிடம் ஓரிருநாள்களில் திரும்பி விடுவதாய்ச் சொல்லிவிட்டு, வெளியூர் போக நடந்தோம், நீடூர்வயல் என்ற ஊரையடைந்தோம்.

கிழ: ஐயோ...

சிங்: பொறுங்கள். இன்னுஞ் சொல்லுகிறேன். அக்காளும் நானும் அந்த ஊரில் வள்ளல் என்று பட்டம் பெற்றவர்களைப் போய்க் கேட்டோம். அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா?

கிழ: என்ன சொன்னார்கள்?

சிங்: உன்னைப் போன்ற இரவலர்களுக்குக் கொடுத்து என்ன பயன் என்றார்கள்?

கிழ: பின் யாருக்குக் கொடுப்பார்களாம்?

சிங்: கட்சிக்காரர்களுக்கு.

கிழ: அவர்களுக்குக் கொடுத்தால் என்ன பயனும்?

சிங்: தாளிகையில் இவர்களுடைய பெயர்களைப் போட்டு வள்ளல் என்று பெரிது படுத்துவார்கள். அடுத்துப் பதவிக்கும் வரலாம்—என்ற நினைப்பு. கொடுத்த பணத்தைப் பலமடங்காக்கிச் சேர்த்து விடலாம். இன்றைய நிலையும் அப்படித்தான் இருக்கிறது.

கிழ: ஐயோ! சிங்கா என் வரலாற்றின் பக்கமே நீ சொல்வது வந்துவிட்டதே. என் நிலையும் இப்படித்தான் இருந்தது.

சிங்: இன்னுங் கேளுங்கள் தாத்தா. அந்த ஊரில் எங்களுக்காக இரக்கங் காட்ட எவருமில்லை. அவனவன் வயிற்றைப் பார்த்துக் கொண்டிருந்தானேயல்லாமல் மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. பேசுவது மட்டும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்!'

கிழ: இவ்வளவு துன்பத்தைப் பார்த்தும் பெற்றோரிடம் போக வேண்டும் என்ற எண்ணம் வரவில்லையோ?

சிங்: எப்படி வரும் தாத்தா? பெற்றோரே துன்பத்திலிருக்கிறார்கள். தங்களைக் காக்கவே இப்படி அலையும் போது அவ்வெண்ணம் எப்படி வரும்? வரவில்லை.

கிழ: அதுவும் உண்மைதான். பிறகு என்ன செய்தீர்கள்?

சிங்: ஒரு நாளைக்கு உணவு கிடைக்கும்; மறுநாளைக்கு உணவு அகப்படாது. குழந்தை அழும். அக்காளும் கண்ணீர் விடுவாள். நான் கலங்கினாலும் காட்டிக் கொள்ள மாட்டேன்; அவளைத் தேற்றிடுவேன். ஒரு நாள், தாத்தா! ஒருவன் பல்லைக் காட்டினான். வேலை தருவதாக இரக்கங்காட்டிச் சொன்னான். இருவருடைய கவலையும் விட்டுவிட்டு, அவனுடைய பேச்சைச் செவி மடுத்தோம்.

கிழ: உங்கள் மீது இரங்கியவன் நல்லவன்; எல்லோரும் ஒன்று போலவா இருப்பார்கள். நல்லவர்களும் உண்டல்லவா?

சிங்: அப்படித்தான் நானும் நினைத்தேன்.

கிழ: சரி, பிறகு?

சிங்: நானும் அக்காளும் உணவிற்காகத் தவித்து நிற்கும்போது, இப்படிச் செல்வன் ஒருவன் முன் வந்தான்; அதனால் அவனிடமும் வேலை கேட்டோம். அவன் இனப்பற்று உள்ளவனைப் போலப் பேசினான். அவன் பேச்சு காதுகளுக்கு நன்றாக இருந்தது. அவன், உங்களைப் பார்த்தால் நல்ல வளமாக வாழ்ந்தவர் போலத் தெரிகிறது; நீங்கள் மழையில் நனைந்த கிளிக்குஞ்சுகள் போல வறுமையில் நடுங்க வேண்டாம். இரந்துண்ண வேண்டாம்; என் வீட்டில் இருவருமே வேலை செய்யலாம் வருகிறீர்களா எனக் கேட்டான். தமிழன் இரப்பது கூடவே கூடாது; ஆவிற்கு நீர் வேண்டும் என்றிரப்பதே இழிவென்று சொன்னவனே தமிழன் தானே எனக் கொஞ்சும் மொழியில் பேசினான்.

கிழ: நீரை விட்டு நிலத்தில் விழுந்த மீன் தண்ணீருக்குள் தவறி விழுந்ததைப் போல இருந்திருக்குமே.

சிங்: ஆமாம். அப்படித்தான் மகிழ்ந்தோம்.

கிழ: என்ன வேலை என்றான்?

சிங்: வளமனையில் வாழ்ந்த நீங்கள்—என் வீட்டைத் தூய்மையாக வைத்துக் கொள்ளத் தெரியும்; அதனால் என் வீட்டை அழகு படுத்தி வைத்துக் கொண்டிருந்தால் போதும், என்றான். என்னைப் பார்த்து இவன் யார் என்றான்? என் அக்காள் என் உடன் பிறந்த தம்பி என்று சொன்னாள். இவனுக்கும் வேலை தருகிறேன் என்றானவன்.

கிழ: நல்லதாயிற்றே; வேலை வேலையென்றலைந்ததற்குப் பயன் கிடைத்தது.

சிங்: ஆமாம் ஐயா, அக்காள் என்னிடம் இசைவு கேட்க என் முகத்தைப் பார்த்தாள், நல்லவாய்ப்பென்று போவோம் என்றேன்; பின்வாங்கவில்லை.

கிழ: அப்படியானால் அந்த செல்வனின் வீடு போய்ச் சேர்ந்தீர்கள்.

சிங்: ஆமாம். அக்காளுக்கு வீட்டு வேலை. எனக்கு எடுபிடி வேலைகள். இருவரையும் நன்கு கவனித்தான். கன்றைப் பேணுவதுபோலப் பேணினான். 'சாப்பிட்டீர்களா? ஏதும் தொல்லைகள் உண்டா?' என்றெல்லலாம் அடிக்கடிக் கேட்டு எங்கள்மீது அளவு கடந்த அன்பைக் காட்டினான், அச் செல்வன். நாங்கள் அவன் நல்லவன்; பண்புள்ளவன் என்று மகிழ்ந்தோம்.

கிழ: நல்ல வேளை. நீங்கள் பட்ட துன்பத்திற்கு அந்த செல்வன் நல்லவனாக அமைந்தான். ஒருவகையாக உங்கள் கவலையும் நீங்கிற்று—என்று சொல்.

சிங்: என்ன கவலை நீங்கிற்று? இதுதான் இன்பம் என்று எண்ணியதால் அடிமையாக இருக்கிறோம் என்பதை மறந்து வாழுகிறோம்; அவ்வளவுதான்.

கிழ: சுற்றத்தாருடைய எண்ணம் வரவில்லையா?

சிங்: எப்படி ஐயா வரும்? அடிமை வாழ்வில் எவனுக்கும் இனவுணர்வு வராதே. அடிமை வாழ்வில் அரத்தம் குளிர்ந்து விடும். சூடு ஏறாது. அதனால் சுற்றம் பற்றிய எண்ணம் எழவே இல்லை. பாலையில் நடந்தவனுக்கு குளிர் நிழல் கிட்டியதுபோல அந்த அடைப்புக் கூட்டுக்குள், பழந்தின்று கிடக்கும் கிளிபோல அடைபட்டுச் கிடந்தோம். அவன் வீடு தவிர வேறு இடம் எதுவும் எங்களுக்குத் தெரியாது.

கிழ: கவலையற்ற வாழ்வு என்று சொல்.

சிங்: இல்லை; இல்லை. என்னுடைய அக்காளின் வாழ்வின் முடிவிற்கு அந்த அடிமை வாழ்வு வழி வகுக்கத் தொடங்கியது.

கிழ: என்ன ஆனது?!

சிங்: ஒரு நாள் அந்த செல்வனின் வீட்டார் அனைவரும் வெளியூர் சென்று விட்டார்கள். நானும் அவர்களுக்குத் துணைக்காக அனுப்பப் பட்டேன். என் அக்காள் மட்டும் அந்த வீட்டில் இருந்தாள். செல்வனும் அன்று வீட்டில் இருந்தான்.

(காட்சித் திருப்பம்)

காட்சி—23

உறுப்பினர்கள்: 1. செல்வன், 2. சிங்கனின் அக்காள்.

இடம்: செல்வனின் வீடு.

சிங். அக்கா: (குழந்தையை உறங்க வைத்துவிட்டு எச்சில் ஏனங்களைத் தேய்த்துக் கொண்டே, ஏதோ ஒரு பாட்டை மெல்லிய குரலில் பாடிக் கொண்டிருக்கிறாள்.)

செல்: (சிங்கனின் அக்காள் பக்கம் வந்து) குரல் நன்றாக இருக்கிறது. குறிவைப்பது யாரையோ?

சிங். அக்: (திரும்பிப் பார்த்து) ஐயா; என்ன வேண்டும்?

செல்: வீட்டில் ஒருவருமில்லே; அதனால் தனித்திருக்க இயலவில்லே.

சிங். அக்: (தூய்மையாக்கும் ஏனங்களைப் போட்டுவிட்டு எழுந்து நின்று) வீட்டில் அம்மா இல்லேயா?

செல்: இல்லே. அதனுல்...

சிங். அக்: அதனுல் என்ன?

செல்: அந்த இடத்தில் நீ...

சிங். அக்: ஏழை என்பதால் எதையும் பேசலாம் எனப் பேசலாகாது.

செல்: நீ ஏழைதான். ஆனுல் நீ பணியாற்றும் இடம் செல்வன் ஒருவன் மனேயில், நீ எதையும் என்னிடம் கேட்கலாம்.

சிங். அக்: எனக்கு எதுவும் வேண்டாம். உயிர் இருப்பதால் உணவிற்காக இங்கிருக்கிறேன். அதுவும் என் குழந்தைக்காக. அல்லாக்கால் மாந்தர்கள் உருவில் விலங்குகள் வாழும் இந் நாட்டில் வாழவே வேண்டாம்.

செல்: என்னேயும் சேர்த்தா?

சிங். அக்: தங்களைப் பற்றித் தங்களுக்கே தெரியுமே. நானு சொல்ல வேண்டும்?.

செல்: தப்பாக எண்ணுதே, நான் நல்லவன்.

சிங். அக்: அப்படியானுல் பொல்லாதவன் என்று யாரைச் சொல்ல?

செல்: பல பெண்களோடு ஆடிய கண்ணனேயே பொல்லாதவன் என்று கூறவில்லே. அவன் கடவுளாகி விட்டான். நான் மட்டும் எப்படிப் பொல்லாதவன் என்று சொல்லமுடியும்? நான் மாந்தன்தானே!

சிங். அக்: கழுதைகூட நெறியோடு வாழும். ஒரு பெண் கழுதையோடு செல்லும் ஆண் கழுதை வேறு பெண் கழுதையை நோக்காது. பகுத்தறிவு உடையவனும் மாந்தன், கழுதையைவிட இழிந்தவன்.

செல்: எனக்குக் கடுஞ் சொற்களைக் கேட்டுப் பழக்கமில்லே.

சிங். அக்: அப்படியானுல் கடுஞ் செயலேச் செய்யாமல் இருக்க வேண்டும்.

செல்: இ'து என்ன கடுஞ் செயல். ஓர் ஆண் இல்லாத போது ஒரு பெண் வேறு ஓர் ஆணேடு இருத்தல் தவறு இல்லே. அதைக்கூட பெண்ணுரிமை என்று கூறலாம்.

சிங். அக்: நான் ஒரு பண்பான குடும்பத்தில் பிறந்தவள்-பகுத்தறிவும் உண்டு. உரிமை என்பது பொதுவானது. அதை ஓர் இனத்தின்மீது திணித்தல் கூடாது, நான் கேட்கிறேன்.

ஐயா நீங்கள் என்னை விரும்புவதுபோல உங்கள் மனைவி ஓர் ஆணை விரும்ப உரிமை உண்டா?

செல்: நீ மிகுதியாகப் பேசுகிறாய்.

சிங். அக்: என்னுடைய கற்பைக் காத்துக் கொள்ள வேண்டுமே.

செல்: அ'து ஒரு கற்பனை.

சிங். அக்: ஆம். அது பெண்ணுக்கு மட்டும் என்பதால்.

செல்: கற்பு என்பது ஆணுக்குக் கற்பிக்கப் படவில்லை.

சிங். அக்: கற்றுக் கொள்ளத் தவறிவிட்டீர்கள். கேளுங்கள், என்னை விரும்பும் நீங்கள் உங்கள் மனைவியும் உங்களைப்போல் ஓர் ஆணை விரும்பலாமா? அதற்கு ஆணாகிய நீங்கள் இசைவீர்களா?

செல்: சீ. நாயே என்ன சொன்னாய்? (பிடித்திழுத்து முரட்டுத் தனமாகக் கற்பழித்து விடுகிறான்.)

சிங். அக்: (செல்வரிடஞ் சொல்லாமல் தன் பிள்ளையையும் எடுத்துக் கொண்டு பெற்றோரிடம் சேர்ந்து, அன்று பெய்த மழை வெள்ளத்தில் பாய்ந்து தற்கொலை செய்து விடுகிறாள்.)

(தொடரும்)

---

(அட்டை 3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருத்தெல்லாம் எடுத்துரைக்க இந் நாட்டில் எங்கே கிடைத்தது உரிமை? இந்திய அரசுக்கு எதிராகப் பேசினால், அரசுக்கு இரண்டகம் என்று காவல் துறையினர் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்ந்திடும் நிலைமையுள்ளது.

நிற்க. இந்திய அரசு எத்துணை விரைவாக இந்தியைச் சந்து பொந்துகளில் எல்லாம் மூலை முடுக்குகளில் எல்லாம் திணிக்கிறது என்பதற்கு மேலும் சான்றுகள் கிடைத்துள்ளன. இதுகாறும், நடுவணரசு அலுவலகங்களில் ஊழியர் வருகைப் பதிவேடு தன்னில் பெயர்கள் ஆங்கிலத்தில் மட்டுமே வந்தன. ஆயின், இக் கணக்காண்டிலிருந்து (ஏப்'. 87) அப்பதிவேட்டில் பெயர்கள் இந்தியிலும் ஆங்கிலத்திலும் எழுதப் பெறுகின்றன. இது மட்டும் அல்லாது அண்மையில் நடுவணரசு அலுவலகங்களில் ஒரு சுற்றறிக்கை வந்துள்ளது. அதன்படி, ஆங்கிலத்தில் மட்டும் உள்ள இழுவை முத்திரைகள் உடனடியாக அழிக்கப்பட்டு இந்தியிலும் ஆங்கிலத்திலும் உள்ள புதிய இரு மொழி இழுவை முத்திரைகள் செய்யப்பட்டு அலுவல்களில் பயன்படுத்தப்பட வேண்டும். இங்ஙனம், தமிழ்நாட்டிலுள்ள நடுவணரசு அலுவலகங்களில் தமிழ் துரத்தப்பட்டு அயன்மொழிகள் கோலோச்சுகின்றன. ...இவண், தங்கள் மேன்மை மறவா,

—க. இராயவேல், அறி. இ. (ச. இ.), சென்னை-21

# நாமே இனி மீட்போம்!

- வள்ளிக்கேள்வன் -

போர்மூண்டது யாழ்மா நகர் பொருதுமபடி வந்தார் ;
வேரூன்றிய தமிழ்ப்பேரினம் வேர்வீழ்த்துவம் என்ருர் ;
போரூன்றிய மறவோருடன் பொருதுந்திறம் இன்றி
ஊர்வாழ்ந்திடு தமிழ்மாந்தரின் உடல்சாய்த்தனர் கொடியோர் !

பாழுற்றன பலதொன்னகர் வளமேமிகு வயல்கள்.
சூழுற்றன கனல்வெம்புகை தொடருந்துயர்த் திரள்கள்.
வாழ்வற்றிடர் ஆருயினும் யாழ்மாநகர் தன்னை
கோழைக்குணப் பகைவோர்கொள விடுவோமிலை தோழா !

செயவர்த்தனன் திமிராய்க்கொலைத் தீயாய்ச் சொரிகின்ருன் :
நயன்மைக்கென தில்லிக்குறு நரியார்நடிக் கின்ருர் ;
கயமைத்தனம் மிகும்ஆரியக் கரவால்அழி வதுவோ ?
வயிறிங்கெரி சொரிகின்றது துடிக்கின்றது மானம் !

இங்கேதமிழ் மொழியாய்ந்தவன் அரசோச்சுதல் இல்லை.
இங்கேதமிழ் உணர்வுள்ளவர் அமைச்சாய்வர வில்லை.
இங்கேயிவர் தில்லிக்கெடு பிடியாய்ப்பணி கொண்டார்.
எங்கேயினித் தன்மானமும் தமிழ்மானமும் இங்கே ?

காணின்தனி யீழந்தனைக் காண்போம்தமிழ்த் தோழா !
பேணும்என வெறும்பேச்சினை வைப்பார்அதை ஏலோம் !
பூணும்புதுப் பதவிக்கெனப் பொய் யாய் வலைவிரிப்பார்
வீணென்றினி வீழ்வோமிலை கொள்கைக்குயிர் கொடுப்போம் !

தமிழ்ப்பேரின் வரலாற்றினில் இதுவேகறை ஏடு.
இமைசோர்வதும் வடவோரிடம் இரக்கின்றதும் தாழ்வு.
தமிழா ! வெறி நாயா,கிளிக் குஞ்சின்உயிர் காக்கும் ?
சமராடுதல் இனிதேகொடும் பகைவோர்தலை வீழ்த்து !

நம்தங்கையர் கற்பைநமக் கெதிரேஇழக் கின்ருர் ;
நம்பிள்ளையர் பகைவோர்கையில் கிழிபட்டிறக் கின்ருர் ;
கொம்பன்எவன் ? உடன்பாடெனப் பேச்சேனக் குறித்தான் ;
நங்கள்இறை யாண்மைத்திறல் நாமேயினி மீட்போம்.

---

**அன்பர்கள் கவனிக்க !**

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில், மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக் கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிருேம்.

-அமைச்சர்

# "கனிச்சாறு" ஒரு பல்கலைக் களஞ்சியம்.

புலவர். ப. எழில்வாணன், க. மு., கல். இ.,

சிறந்த இலக்கியங்கள் ஒரு நாட்டின் அழியாச் செல்வங்கள்; அன்றாட வாழ்க்கைக்கு வழிகாட்டும் அணையா ஒளிவிளக்குகள் எனலாம். அவ் விலக்கியங்கள் ஒரு பண்பட்ட உயிர்ப்புள்ள மொழியில்தான் தோன்ற முடியும்.

மொழியாவது, அறிந்த கருத்துகளையும் உணர்ந்த உணர்ச்சிகளையும் உரைப்பதற்குப் பயன்படும் கருவி என்பர். அது பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என்னும் இரு நிலைகளிலும் தளர்ச்சி அடையாமல் வளர்ச்சி கொண்டு தனக்குரிய தனித்தன்மையுடன் திகழின், அதுவே உயிர்ப்புள்ள மொழி எனப்படும்.

அவ் வுயிர்ப்புள்ள "உலகமொழிகளுள் முதன்மையும் முதுமையும், இளமையும் வளமையும், சீர்மையும் நீர்மையும், தனிமையும் இனிமையும், இயல்பும் எளிமையும் உடைய உயர் தனிச் செம்மொழி தமிழ்மொழி ஒன்றேயாகும்". 1.

அத்தகு தமிழ்மொழியில் சிறந்த இலக்கியங்கள் தோன்றுவது இயல்பே! எனவேதான், தமிழ் இலக்கியங்கள் தனித்த பெருமையுடன் காலத்தை வெல்லும் ஆற்றலுடன் திகழ்கின்றன. ஆதலால்தான் வடமொழி 'இருக்கு வேதத்தை' ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த மாக்சுமுல்லர், "தனக்கே உரிய இயல்பாய் வளர்ந்த இலக்கியச் செல்வமுள்ள மொழி தமிழ்மொழி" 2 என்று குறிப்பிட்டார் போலும்!

தமிழ்மொழி அத்துணைச் சிறப்புடைய மொழி என்பதினால், அதில் தோன்றிய இலக்கியங்கள் அனைத்தும் சிறப்புடையன என்று கருதின், அது தவறான கருத்தாகும்.

'கல்லெல்லாம் செம்மணி(மாணிக்க)க் கல்லாகுமா?' இலக்கியமெல்லாம் உயிர்ப்புள்ள சிறந்த இலக்கியமாகுமா? வாழ்க்கையில் கண்ட பேருண்மைகளையும் பட்டறிவையும் வெளிப்படச் செய்து, பிறர் உள்ளத்தில் ஒன்றச் செய்யும் உயர்ந்த அமைப்பே சிறந்த இலக்கியமாகும். அவ்வகையில் அமைந்தவையே அகநானூறு, புறநானூறு, திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற நம் அரும்பெரும் தமிழ் இலக்கியங்கள்;

அவை உயிர்ப்புள்ள சிறந்த இலக்கியங்களாக விளங்குவதற்குக் காரணம் உரைநடையினும் சிறந்த பாடல் வடிவில் அமைந்திருப்பதே எனலாம்.

பாடல்களும் அவற்றிற்குரிய பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும். இல்லையேல், பாடல்களும் அவற்றால் ஆகிய நூலும் சிறப்பெய்த முடியா.

பாடல்(கவிதை) என்பது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தன்மையுடையதாக இருத்தல் வேண்டும் என்பர் அறிஞர்.

''சொற்களைச் சிறந்த முறையில் அமைப்பது உரைநடை. சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் அமைப்பது பாடல் (கவிதை)''3 - என்பர் கோல்ரிட்சு என்னும் ஆங்கிலப் பாவலர்.

இயற்கையைப் பற்றித் திறம்படப் பாடிய பாவலர் ஓர்ட்சு-வொர்த்து என்பவர், ''உணர்ச்சிப் பெருக்கே பாடல்(கவிதை)'' 4 என்று குறிப்பிடுகிறுர்.

'கட்டுவதன்று பாடல்; கொட்டுவதுதான் பாடல்' என்பதும் சிந்திக்கத் தக்கது. இத்தகைய பண்புகளைக் கொண்ட பாடல்களால் ஆகிய இலக்கியங்களே சிறப்பெய்த முடியும். உயிர்ப்புடையனவாக விளங்கவும் இயலும்.

அத்தகைய இலக்கியமே கனிச்சாறு என்னும் நூலாம். ஆதலால் இது கால வெள்ளத்தைக் கடக்கும்; உலகத்து உள்ளங்களின் உயிர்த்துடிப்பாய் இருக்கும். அழியா இலக்கியமாய்த் தமிழர்க்குக் கலங்கரை விளக்கமாய் என்றென்றும் திகழும் என்பது உண்மையே.

இந்நூலாசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனுர், இதன் முன்னுரையில், பாடல் ''வெளிப்பாடாக இருத்தல் வேண்டுமேயன்றி, வெளிப்படுத்துதலாக இருத்தல் கூடாது'' 5- எனக் குறிப்பிடுவதையும் நோக்குதல் வேண்டும். ஆகவே கனிச்சாறு ''மனமும் அறிவும் வயப்பட, உணர்வும் எழுச்சியும் மேம்பட்டுப் புறநிலையழுத்தத்தால் பீறிக் கொண்டு வெளியேறும் பாடல்'' 6-களால் அமைந்தது என அறியலாம்.

கனிச்சாறு, பாவலரேறு பெருஞ்சித்திரனுரின் வெறும் பாடல் தொகுப்பே என எண்ணுவோர் அந்நூலினைப் புரட்டியும் பார்க்காதவர் ஆவர். அஃது ஒரு பல்கலைக் களஞ்சியம் ஆகும்.

கழகக்(சங்க) கால நூல்கள் அக்கால மக்களின் நாகரிகம், மொழி, கலை, வாழ்வு, வரலாறு, பண்பாடு போன்றவற்றைக் காட்டும் காலக் கண்ணுடிகளாக இருப்பனபோல், கனிச்சாறும் இக்கால மக்களின் வாழ்க்கை முறை, அரசியல் நிலை, பயிலும் கலை, மொழிப்பற்று, அறிவியல், பொதுவுடைமை, காதல், இயற்கை நுகர்வு, மாந்தர் இயல்பு, வளர்வு, தளர்வு இன்ன பிறவற்றை தொகுத்தும் வகுத்தும் காட்டுகின்றது. பல்வேறுன துறைகள், அறிவு நிலைகள், தொழில் முறைகள் தொடர்பான கருத்துகளையும் சுட்டுகின்றது. அதனுல் கனிச்சாறு ஒரு வாழ்க்கைக் களஞ்சியம்; பல்கலைக் களஞ்சியம் ஆகும்;

கனிச்சாறு மூன்று தொகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இதுவரை எந்தப் பாவலரின் நூலிலும் இல்லாத புதுமையாகப் பாடல் விளக்கக் குறிப்புகள் கொடுக்கப் பெற்றிருப்பது மிகச் சிறப்பானதாகும். ஒவ்வொரு பாடலும் நூலாசிரியரின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தது என்பதை அக்குறிப்புகளின் மூலம் அறிய நம் மெய் சிலிர்க்கிறது.

''பாடல்(கவிதை) பொழுது போக்குவதற்காகவே என்ற கருத்துத் தமிழர்க்குப் பொருந்தாது, தமிழ்ப் பாவலன்(கவிஞன்) பொழுது போக்குக்குப் பாடல் பாடியவன் அல்லன். அறிவுறுத்தி மாந்தரை உயர்விப்பதே தமிழ்பாடலின் நோக்கம்'' 7 என்பதையும் அதன் வழி அறிய நெஞ்சம் உணர்ச்சியால் விம்முகின்றது.

முதல் தொகுதி தமிழ், இந்தி எதிர்ப்பும் இன எழுச்சியும் என இரு பகுதிகளாகவும், இரண்டாம் தொகுதி நாட்டுரிமை, பொதுமை உணர்வு, இளைய தலைமுறை என மூன்று பகுதிகளாகவும், மூன்றும் தொகுதி காதல், இயற்கை, இறைமை, பொது என நான்கு பகுதிகளாகவும் செப்பமாக அமைக்கப் பெற்றுள்ளன.

முதல் தொகுதி தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்குகின்றது. முதற் பாடலே தமிழ்பற்றியதுதான். அது 'தமிழே எனக்கு இறைவன்' என்னும் தலைப்புடன் எழுச்சியுடன் திகழ்கிறது. அப்பாடல் ஆசிரியரின் ஆழ்ந்த தமிழ்நெஞ்சத்தைத் தெள்ளென நமக்குப் புலப்படுத்துகின்றது. ''தமிழே உயிர், உடலம், உணர்வு, உலகம், கருத்து, பார்வை, ஓசை, பிறவி, தாய், தந்தை, குரு, கல்வி, காட்சி, துணைவி, குடும்பம், இன்பம், குழவி, உறவு, சுற்றம், வாழ்க்கை, தொண்டு, எழுத்து, பேச்சு, அறிவு, மூச்சு, நட்பு, விருந்து, வினை, நனவு, மறை, கனவு, மெய்ம்மம், இறைவன் என்னும் உயிர்க்கொள்கை இப்பாட்டில் ஒளிப்பிழம்பாய்த் திகழ்கிறது.'' 8.

இனி, கனிச்சாறு சிறந்த ஓர் இலக்கியம் மட்டுமன்று வரலாற்று நூலும் ஆகும் என்பதைக் காணலாம்.

புறநானூறு, பதிற்றுப்பத்து போன்ற நூல்களின் வாயிலாக எவ்வாறு அக்கால வரலாற்றினை அறியமுடிகிறதோ அவ்வாறு இக்கால வரலாற்றினைக் கனிச்சாறின் மூலம் அறியமுடிகின்றது. எடுத்துக் காட்டாக ஒரு சில காண்போம்.

முதல் தொகுதி 27-ஆம் பாடல் விளக்கக் குறிப்பின் மூலம் 1965-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றதையும், பாவலரேறு பெருஞ்சித்திரனார்(இந்நூலாசிரியர்) தம் 'தென்மொழி' இதழில் வீறுசான்ற ஆசிரியவுரை, பாடல்கள் எழுதி உணர்வும் ஊக்கமும் மக்களுக்கும், மாணவர்க்கும் ஊட்டியதையும், அதனால் அன்றைய தமிழ்நாட்டரசு அவர்மேல் வழக்குத்தொடுத்து அவரைச் சிறைக்கு அனுப்பியதையும் அறியலாம். 49-ஆம் பாடல் விளக்கக் குறிப்பின் மூலம் அந்நாளைய சென்னை ஆளுநரை இந்திப் போராட்டம் அகற்றியதையும், 150, 151-ஆம் பாடல் விளக்கக் குறிப்புகளால் இலங்கையில் சிங்கள இனம் தமிழினத்தை இன அழிப்புச் செய்ததையும் உணரலாம். இவைபோல இன்னும் பல செய்திகள் அறியக் கிடக்கின்றன. எனவே கனிச்சாறு ஒரு வரலாற்று நூலும் ஆகும்.

இனி, அதனை ஒரு குமுகாயவியல் நூல் எனவும் கூறலாம். இக்காலத் தமிழ், தமிழர் நிலை, வாழ்க்கை முறை, தொழில், இன்றைய இளைஞர் ஒழுக்கம், பண்பு, கல்வி போன்றவற்றையும் நன்கு படம் பிடித்துக் காட்டி இக்காலக் குமுகாயம் எத்தகையது என விளக்குகின்றது.

"சோற்றுக்கு மடிவிரிக்கும் புலவர் கூட்டம் !
சுரண்டுகின்ற வாணிகர்கள் ! அடிக்கும் மென்மைக்
காற்றுக்கும் தாங்காத குடிவாழ் மக்கள் ;
கண்ணீர்க்குப் பஞ்சமில்லை ; பழம் விளக்கு
மாற்றுக்குக் குஞ்சமெனப் பதவி பட்டம் ;
பகற்கொள்ளை கலைக் கொலைகள் ;"—9

இப் பாடல் போலச் சான்றுக்குப் பற்பல காணலாம்.

இனி, கனிச்சாறு ஓர் அறிவியல் நூல் என்றும் பொருந்தும் ! காலைக் கதிரவன் எழும்பும் நேரத்தில் மேற்கே நிலவின் தோற்றமும் தெரிகின்றதெனின் அது தேய்பிறைக் காலமே ! இவ் விண்ணியல் கருத்தை,

"மேற்கில் மதிகரையும், கீழ்க் கதிரும் மேலெழும்பும் "—10. என்னும் அடியால் அறியலாம்.

'இடி, மின்னல்' என்றே பலரும் கூறுவதனை அறிவோம். எனினும் 'மின்னல், இடி' என்னும் முறைவைப்பே அறிவியலுக்குப் பொருத்தம் என்பதை அவர் அறியார் போலும் ! இடித்தலாகிய தொழில் நிகழ்ந்தவுடன் அதன் பயனுய்த் தோன்றுவன ஒளி, ஒலி ஆகும். ஒளி-மின்னல் ; ஒலி-இடி : ஒளியின் (மின்னல்) வேகமே ஒலியின் (இடி) வேகத்திலும் அதிகம். அதனுல்தான் மின்னல் தோன்றிய பிறகே இடியோசையினைக் கேட்க முடிகிறது. மின்னலே தோன்றவில்லை எனின் இடியோசை ஏது ? இதனைத் தான் "மின்னலதும் காணேம்! இடியிடிப்பும் மேற்காணேம்"-11. என்னும் அடி விளக்குகிறது. இவை போன்ற இன்னும் பல சான்றுகளால் கனிச்சாறு ஓர் அறிவியல் நூல் எனலாம்.

இனி, கனிச்சாற்றை ஒரு மொழியியல் நூலாகவும் காணலாம். 'மொழியெனப்படுவது உணர்வினுல் மூளப்பது'-12. என்றும், "ஒலித்திறம் வரித்திறம் ஒத்த பொருட்டிறம்; வலித்திறம் மெலித்திறம் "-13. ஆகியன ஒரு மொழியின் பல கூறுகள் என்றும், 'மொழி நலமே இன நலமாம்'-14. என்றும், 'தமிழர்க்குத் தமிழே தாய்மொழி'-15. என்றும், மொழி வகையைப் 'புன்மொழி, இன்மொழி, புலை மொழி, புது மொழி, தென் மொழி, தாய் மொழி'-15 என்றும், 'வயிற்று மொழி, வாய் மொழி, பயிற்று மொழி'-17, என்றும், ஒரு மொழி வளர வேண்டின், 'புதுச் சொல் புனைவும் புது நூல் யாப்பும், எது குறைவென ஆய்ந்து, அதுவது இயற்றலும்'-18 வேண்டும் என்றும், இன்னும் பலவாருகவும் விளக்குவதினுல் கனிச்சாறு ஒரு மொழியியல் நூலாகும்.

இன்னும் கூறின், கனிச்சாறு அளவற்ற புதிய கலைச் சொற்களைக் கொண்ட சொற்களஞ்சியம் என்றும், மரபு பிறழாத பாடல்களைக் கொண்டு புதுமை நோக்கில் எழுந்த யாப்பதிகாரம் என்றும், எண்வகை மெய்ப்பாடுகளைக் கொண்ட நாடக நூல் என்றும், அருமையான உவமைகள் போன்ற அணி நலன்களைக் கொண்ட ஓர் அணிநூல் என்றும், கனிச்சாறு என்னும் பெயருக் கேற்ற உள்ளத்தை இன்பத்துள் ஆழ்த்தி நரம்பை முருக்கேற்றிப் புத்துணர்வூட்டும் ஓர் ஒப்பற்ற உயர் நூல் என்றும் இன்னும் பலவாருகவும் கண்டு மகிழலாம்.

'ஒவ்வொரு நூலுக்கும் உரிய பார்வை முறையைக் கடைப் பிடித்தால் உள்ள நயங்கள் வெளிப்படும்'-19. எனவே அம் முறையில் அதனைக் காண்போருக்கு அவை புலப்படும். இத் தகைய பெருமைக்குரிய நூலின் ஆசிரியர் பாவலரேறு பெருஞ் சித்திரனார் ஓர் உயர்ந்த சிந்தனையாளர் என்பதனையும் இதன் வழி உணர முடிகிறது. ஏனெனில் 'உயர்ந்த சிந்தனைகளின் சிறந்த படைப்பே இலக்கியம்' ஆகும். (Literature is a record of best thoughts '—Emerson)

இந்நூல் இவ்வாறு ஒரு பல்கலைக் களஞ்சியமாய்ப் பழமைக் குப் பழமையாயும், புதுமைக்குப் புதுமையாயும், உயர்ந்த நோக்கோடு எவையெவைபோல நோக்குகின்ரேமோ அவை யவைபோலத் தென்படும் தனிச் சிறப்புடைய நூலாகவும் விளங்குகின்றது.

இந்நூல் தமிழ்த்தாய் பெற்ற அணிகளுடன் ஒன்ருக வைத்துப் போற்றத்தக்கதாகும். இந் நூலினுல் தமிழும், தமிழ் நாடும் பெருமையடைகின்றன; தமிழனும் பெருமையடை கின்ருன் !

எனவே எந்நாளும் கனிச்சாறு பருகுவோமாக ! ஊட்டம் பெறுவோமாக ! இஃது தமிழ் மகன் ஒவ்வொருவனின் கடமை யாகும்.

அடிக்குறிப்புகள்

1. தொல். பொருளதிகாரம்—(வேலா வெளியீடு 1968) புலவர் குழந்தையுரை—முடிவுரை.
2. கவிஞராக— அ. கி. பரந்தாமனர், (பாரி நிலையம் 1975) பக்கம்—5.
3. கவிஞராக— அ. கி. பரந்தாமனர் ,, ,, 38
4. ,, ,, ,, ,, 38
5. கனிச்சாறு—பெருஞ்சித்திரனர், முதல் தொகுதி — பொது முன்னுரை. பக்கம்—4
6. ,, ,, ,, ,, —4
7. செந்தமிழ்ச் செல்வி—சிலம்பு 53 பக்கம் 563

8. கனிச்சாறு—முதல் தொகுதி பக்கம் 9
9. ,, ,, பக்கம் 151
10. ,, ,, ,, 38 பாடல் 27.
11. ,, ,, ,, 191 (அடி 24)
12. ,, ,, ,, 74 (அடி 189)
13. ,, ,, ,, 75 (அடி 213)
14. ,, ,, ,, 52 (பாடல் 3)
15. ,, ,, ,, 18 (பாடல் 3)
16. ,, ,, ,, 12
17. ,, ,, ,, 23
18. ,, ,, ,, 11
19. ஒப்பியல் நோக்கு; வ. சுப. மாணிக்கம் பக்கம் 106. (1978).
20. செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 54 பக்கம் 38.

(இக் கட்டுரை அனைத்திந்தியத் தமிழாசிரியர் மன்றத்தின் 19-ஆம் கருத்தரங்கையொட்டி வெளியான ஆய்வுக் கோவை முதல் தொகுதியில் வெளியிடப் பெற்றுள்ளது.)


## தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்
## புதிய கட்டண விளக்கங்கள்

| | தனியிதழ் | அரையாண்டுக் கட்டணம் | ஆண்டுக் கட்டணம் | வாணாள் கட்டணம் |
|---|---|---|---|---|
| தென்மொழி :— | | | | |
| உள்நாடு : | 1-75 | 10-00 | 20-00 | 300-00 |
| வெளிநாடு : | | | | |
| வான் வழி : | 9-00 | 60-00 | 120-00 | 2000-00 |
| கப்பல் வழி : | 6-00 | 40-00 | 80-00 | 1300-00 |
| தமிழ்ச்சிட்டு :— | | | | |
| உள்நாடு : | 0-75 | — | 9-00 | 150-00 |
| வெளிநாடு : | | | | |
| வான் வழி : | 6-00 | — | 75-00 | 1250-00 |
| கப்பல் வழி : | 4-00 | 4-00 | 50-00 | 900-00 |
| தமிழ்நிலம்:— | | | | |
| உள்நாடு : | 0-85 | 22-00 | 44-00 | 750-00 |
| வெளிநாடு : | | | | |
| வான் வழி : | 6-00 | 160-00 | 320-00 | 5000-00 |
| கப்பல் வழி : | 4-00 | 110-00 | 220-00 | 3600-00 |

தொடர்பு முகவரி : 5, அருணாசலத் தெரு, சென்னை—600005.
தொலைபேசி எண் : 847829

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழினம் இந்தி(ய) ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றால் தமிழன் இழந்த அத்தனை உரிமைகளையும் பெறுகின்றபோது, தமிழகத்தில் வளர்ந்துவிட்ட பேராயக் கட்சி தமிழனின் விடுதலை உணர்வினையே சாகடிக்க முயன்றது. தமிழன் என்ற இன உணர்வை அழித்துவிடவும் சூழ்ச்சி செய்தது. தமிழனுக்குக் கொடிய பகை எ'து என்றால் அது தான் தமிழகத்தில் கொஞ்சம் நஞ்சம் இருந்து வரும் பேராயக் கட்சியேயாகும்.

தமிழ் நிலத்தில் பேராயக் கட்சிக்கு எதிரியாகத் தமிழனின் இன உணர்வு பெற்று வளர்ந்து வந்த திராவிடர் கழகம் பிளவு பட்டதும், 1949-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ஆம் நாள் தி. மு. க. தொடங்கப்பட்டது. அக்கட்சி 1956-ஆம் ஆண்டு திருச்சியில் கூடித் தேர்தலில் போட்டியிட முடிவு செய்ததும், தமிழர்களின் விடுதலைக் கோரிக்கை மெல்ல, மெல்லப் பின்னுக் குத் தள்ளப்பட்டுக் கொண்டே போய் 1962-ஆம் ஆண்டு இந்தி யத் துணைக்கண்டத்தின் மீது சீனு படை எடுத்தது என்ற ஒரே காரணத்துக்காகப் பிரிவினை தடைச் சட்டத்துக்கு அஞ்சி தி.மு.க. தன் உயிர்க் கொள்கையான தனி நாட்டுக் கோரிக்கையைக் குழி தோண்டிப் புதைத்து விட்டது. பிறகு இவர்களின் வளர்ச்சியால் தமிழ்நாட்டுக்கும் தமிழ்க் குமுகாயத்துக்கும் எந்தப் பயனும் இல்லாமல் போயிற்று. பேராயக் கட்சிக்கும் இவர்களுக்கும் எந்தவகை வேறுபாடும் இல்லை.

1972க்குப் பின்னர், தமிழ் நிலத்தில் அ, தி. மு. க. வின் தோற்றம், அதன் மிகுதியான வளர்ச்சி, தமிழனின் தனி நாட்டுக் கோரிக்கை என்கிற நினைவுகூட தமிழ்க் குமுகாயத்திடம் இருக்கக் கூடாது என்று தமிழ்க் குமுகாயத்தை மீள முடியாத அளவிற்குத் தில்லியிடம்-தமிழனிடம் இருக்கும் மிச்ச மீதி உரிமை-களையும்கூட-விட்டுக் கொடுக்கிறது.

அதற்குச் சான்று 1967 வரை மாநிலப் பட்டியலில் இருந்து வந்த கல்வி—வேளாண்மை ஆகிய இரண்டையும் தில்லியரசு பொதுப் பட்டியலுக்கு மாற்றிக் கொண்டதே ஆகும்.

தமிழனின் எல்லாச் சிக்கல்களும் தீர்ந்து போகின்றன. தமிழர் தங்கள் தேவைகளைத் தாங்களே நிறைவு செய்து கொள்-வார்கள்.

இந்த உண்மைகள் தமிழகத்தில் வலிவு பெற்ற இரு இயக்கங்-களுக்கும் தெரியும். இன்று எதிர்க்கட்சியாக இருக்கும் இயக்கம் 'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்-போம்' என்று மாநிலத் தன்னாட்சி கிடைத்தாலே போதும் என்-கிறது. அந்தக் கட்சிக்குத் தமிழ் நிலத்துக்குத் தன்னுரிமை கேட்கத் துணிவில்லை. தந்தை பெரியார் உருவாக்கிய தாய்க் கழகமோ, பெரியாரின் உயிர்க் கொள்கையான தமிழ்நாட்டுத் தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டுச் சிறு, சிறு சிக்கல்களுக்குப் போராட்டம் என்று நடத்திக் கொண்டு

காலத்தைக் கடத்திக் கொண்டு இருக்கிறது. அதற்குத் தமிழக விடுதலை கேட்கத் தில்லியிடம் அச்சம்.

இன்று தமிழ் நிலத்தை ஆளும் இயக்கமோ, வேற்று மொழி பேசுபவர் தலைமையில் இயங்குவதால், அந்தக் கட்சி தமிழனின் இழந்த உரிமைகளைப் பெறப் பாடுபடும் என்று கருதவே இடமில்லை. அக் கட்சியின் தலைவரும், தமிழின உணர்வு என்றால் முகம் சுளிப்பவர். தம்மைத் திராவிடர் என்று கூறிக் கொள்வதில் தாம் மகிழ்ச்சி அடைபவர். இந்த இயக்கங்களிடம் தமிழின நலன்களை எதிர்பார்ப்பதில் எந்தவகைப் பயனும் இல்லை.

இந்தக் கால கட்டத்தில் தமிழினத்தின் எதிர்காலம் கேள்விக் குறியாகவும், இருள் சூழ்ந்தும் இருக்கிறது. தமிழினத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க உ.த.மு.க. வை விட்டால் வேறு எந்த இயக்கமும் இல்லை. தமிழின மீட்சிக்கும், தமிழகத்தின் இருளைப் போக்கவும், களங்கரை விளக்கமாக இன்று உ.த.மு.க. ஒன்றேதான் உள்ளது.

இந் நிலையில் 1937-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போருக்குப் பின்னர்—1965 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போருக்குப் பின்னர் 50 ஆண்டுகளாக எழுவதும், விழுவதுமாக உள்ள இந்தி வல்லாண்மை எதிர்ப்புக் கிளர்ச்சி 1986 ஆண்டு அக்டோபர் திங்களில் மீண்டும் தொடங்கியது.

1986 ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலிருந்து 87 ஆம் ஆண்டு சனவரி திங்கள் வரை 20 ஆயிரம் பேருக்கு மேல் கிளர்ச்சியில் ஈடுபட்டுச் சிறை புகுந்தார்கள். தேவநாகரி லிபியில் உள்ள இந்தி தான் இந்தியாவின் ஆட்சி மொழி என்கிற அரசியலமைப்பின் ஒரு பிரிவினைத் தீ வைத்துக் கொளுத்தினார்கள் என்பதற்காக அரசு இருபதாயிரம் பேர்களைச் சிறையில் அடைத்துத் துன்புறுத்தியது.

குறிப்பாக இந்தி(ய) ஆட்சி அரசியலமைப்புச் சட்டத்தையே தீ வைத்துக் கொளுத்த வேண்டுமென்று நமது தலைவர் அய்யா பாவலரேறு அவர்கள் கூறுவார்கள். இந்தச் சட்ட அமைப்பு தமிழர்களின் நலன்களுக்காக ஏற்படுத்தப் பட்டதன்று. வட நாட்டுப் பார்ப்பனிய முதலாளிகளின் நலன்களுக்காகவே ஏற்பட்டது.

அவர்கள் எந்த அளவிற்குத் தங்கள் வடநாட்டுப் பகுதிகளை வளமாக்கிக் கொள்ளவும், தமிழ்நாடு போன்ற தேசிய இனங்களை நிலையாக அடிப்படுத்தவும் எப்படி எல்லாம் என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அப்படியான எல்லாச் சூழ்ச்சிகளாலும் கிழறுப்புகளாலும் அமைக்கப் பட்டதே இந்திய ஆட்சி அரசியலமைப்புச் சட்டம்.

தமிழினம் போன்ற தேசிய இனங்களில் உழைக்கும் மக்கள் வேளாண்மைப் பெருமக்கள். இவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அரசியலமைப்பை உருவாக்கிய உறுப்பினர்கள் அல்லர்.

உலக இரண்டாம் போர் முடிந்து நட்பு நாடுகள் வெற்றி பெற்றன. செர்மனி, சப்பான், இத்தாலி போன்ற நாடுகள் தோற்றன.

இந்த இரண்டாம் உலகப் போரின் வெற்றிக்குக் காரணமான இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில் இங்கிலாந்தில் நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடிக்கப் பட்டார். தொழில் கட்சி வெற்றி பெற்று ஆட்லி என்பவர் இங்கிலாந்தின் பிரதமர் ஆனார்.

குடியிருப்பு நாடுகளில் வளர்ந்துவிட்ட உரிமைக் கிளர்ச்சிகளை அடக்கி, இனியும் அந்நாடுகளில் ஆட்சி செலுத்திச் சுரண்ட முடியாது. கண்ணியமாக அந்நாடுகளிலிருந்து வெளியேறிப் பொருளியல் அடிப்படையில்தான் அந்நாடுகளைத் தங்கள் கட்டுப் பாட்டிற்குக் கொண்டு வரமுடியும் என உணர்ந்து கொண்ட பிரிட்டீசு அரசின் சார்பில், இந்தியத் துணைக்கண்டத்திற்குத் தன்னுரிமை வழங்க முடிவு செய்து கிரிப்சு என்பவரை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார், பிரிட்டீசு பிரதமர் ஆட்லி.

கிரிப்சு இந்தியத் துணைக்கண்டம் வந்து இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். இந்தியத் தலைவர்கள் பாகிசுத்தான் உட்பட அகன்ற பாரதம் அமையவேண்டும் என்று கிரிப்சிடம் வற்புறுத்தினார்கள். முசுலிம் லீகின் தலைவர் சின்னா அவர்கள், 'இந்துக்களோடு சேர்ந்து வாழ இயலாது; இசுலாமியர்களை ஒடுக்கி, இரண்டாந்தர மக்களாக்கி விடுகிறார்கள். எனவே இசு-லாமியருக்குத் தனிநாடு பாகிசுதான் வேண்டும்' என்று கேட்டு வெள்ளையர் தூதுக் குழுவிடம் வற்புறுத்தினார்.

தந்தை பெரியார் அவர்கள், 'தமிழர்களுக்குத் தனிநாடு வழங்க வேண்டும். தமிழ்நாடு இந்திய ஆட்சியில் இணைக்கக் கூடாது; அப்படி இணைக்கப்பட்டால் வடநாட்டுப் பார்ப்பனிய இந்து வெறியர்களால் தமிழர்கள் அனைத்து உரிமைகளையும் இழந்து இந்திய ஆட்சியில் அடிமை நிலையில்தான் வாழ்வார்கள்' என்று வெள்ளையர் தூதுக் குழுவிடம் வழக்காடினார்.

அன்றிருந்த நிலையில் தமிழ்நாட்டில் வளர்ந்து விட்டிருந்த பேராயக் கட்சியும், அக்கட்சியின் தலைவர்களும் தமிழ்நாடு இந்திய ஆட்சியில் இணைவதை ஆதரித்தமையால், தமிழினமே பேராயக் கட்சியின் ஒரு குரலாக ஆதரித்ததாகத் தவறாக கருதிவிட்டது வெள்ளையர் குழு.

அன்று தமிழகப் பேராயக் கட்சித் தலைவர்கள் தமிழினத் துக்குச் செய்த பெரும் இன இரண்டகத்தால் இன்று தமிழினம் மொழி,—பண்பாடு, கலையொழுக்கம், அறிவியல் துறை, பொருளியல் ஆகிய அனைத்திலும் எல்லா உரிமைகளையும் இழந்து இந்திய ஆட்சியில் அடிமை நிலையில் வாழவேண்டிய இழி நிலை ஏற்பட்டுவிட்டது.

(தொடரும்)

கும் என்று நம்புகிறேன். தென்மொழி அன்பர்கள் சிலருடைய குழப்பத்தை நீக்குதற்கு இத்தகு அறிவிப்பு இன்றியமையாத் தேவையும் ஆகும். தங்களுடைய ''திருக்குறள் மெய்ப்பொருளுரை'' யை ஆவலுடன் எதிர்நோக்குகின்றேன்.

தென்மொழி அன்பன், —க. சி. அகமுடையநம்பி, மதுரை.

O: 1221: அருஞ்சொல்லரசர் பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம். துப்பாக்கி. தி. அன்பழகனின் ''தென்மொழி சிந்திக்குமா?'' (சுவடி: 22, ஓலை: 12, மடல்: 1185) கருத்து குறித்துச் சின்னப்பனாரின் சிறப்பு மடலையும் கி. இளஞ்சேரல் முதுபாண்டியனின் ஒரு கருத்து மடலையும் படித்தேன்.

முரண்பட்ட இவ்விரு மடல்களில் ''நாம் முதலில் தமிழர் என்ற நினைப்புடன் நடந்து காட்டுவோம். அடுத்து மதத்துப் பக்கம் முயல்வோம்'' என்னும் முதுபாண்டியனின் கருத்து வரவேற்கத் தக்கதாகும். எந்த மதத்தில் இருந்து கொண்டும் இக்கருத்தை நடைமுறைப்படுத்த முடியும். ஆனால் உலகின் ஒரே ஒரு சாதி மதமான இந்து மதத்தில் இருந்து கொண்டு, குமுகவியல் நிலையில் தமிழர் என்னும் நினைப்போடு நடந்து காட்டுவது என்பது நடைமுறைக்குதவாதது. ஏனெனில் சாதி அத்தகைய வலிமை கொண்டதாகும். இந்துவாக இருக்கக் கூடாது என்றால் இசுலாமியராகவோ, கிறித்துவராகவோதாம் இருக்க வேண்டுமென்பதில்லை. தமிழ்நிலம் ஏற்றிருந்த பௌத்த மதத்தை பின்பற்றலாமே! தமிழன் என்ற நினைப்பை மறக்கச் செய்கிறது சாதி. இச் சாதியின் ஊற்றாக இருக்கிற இந்து மதத்தை விட்டுத் தமிழர்கள் வெளியேற வேண்டுமென்பது ஏற்கத் தக்கதேயாகும். இதற்குத் தென்மொழி அன்பர்கள் வழிகாட்டுவார்களேயானால் வரலாற்றுத் திருப்பத்தைச் செய்த பெருமை அவர்களைச்சாரும்.

—பொ. புவியரசன், திருச்சி-16.

O: 1222: அன்பு ஐயா, வணக்கம். தமிழ்மொழி வளம் பெறத் தாங்களும், தங்களைச் சுற்றமாய்ச் சுற்றும் உலகும் நலம் பெற வேண்டுகிறேன். தங்கள் உழைப்பு வீண்போகாது. திட்டமிட்டுத் தெளிவாகவே இதழ்களை நடத்துங்கள். 'தமிழ்ச்சிட்டு' நாளையவரலாறு படைக்க இளந்தளிர்களை எவ்வகை வேறுபாடுகளின்றி வளர்க்கட்டும். 'தென்மொழி'யில் அறிவியலின் எந்தத் துறையையும் தனித்தமிழில் வழங்க முடியும் என நிலைநாட்டத் துறை துறைதோறும் முன்னைப் போல் கட்டுரைகளைத் தக்க அறிஞர்களைக் கொண்டு வழங்குங்கள். 'தமிழ்நிலம்'—உலகத் தமிழர்களை ஒன்று கூட்டப் பாடுபடட்டும்.

தென்மொழி 23. சுவடி 4 இல் நம் மொழி ஞாயிறு, பாவாணரவர்களைக் குறித்து வெளியிட்டுள்ள நேருரையைப் படிக்க மிக்க மகிழ்வாய் இருந்தது. பாவாணரய்யாவைத் தங்களைவிட வேறு எவரும் அத்துணைத் துல்லியமாகப் படம் பிடித்துவிட முடியாது. மேலும் ஓர் உண்மையைத் தமிழ் வரலாற்றில் மறைக்க முடியாது. தங்களைப்போல், ஆசிரியரை (பாவாணரவர்களை)ப் பேணிய மாணவர் தமிழ்நாட்டிலேயே வேறு எவருமில்லை என்பதே! அவரைத் தாங்கள் ஒரு குழந்தையாய் (தமிழுக்காக) — நினைத்துப் பேணியதைத் தமிழகம் அறியாது. அவரிடமும் சில குறைகள் இருந்தனவென்றாலும்,— ,பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு'—என்று பொறுத்துக் கொள்ளுங்கள்! ஏனெனில் மொழி ஞாயிறு பாவாணரவர்களும் தென்மொழியும்(தாங்களும்) ஆசிரியரும் மாணவருமாக இணை பிரியாதவர்கள்! தமிழ்மொழி வரலாற்றில் நீங்களிருவரும் செய்த புரட்சி—தூயதமிழ்ப் புரட்சியின் விதை—இனிமேல்தான் அறுவடை செய்யப்பட இருக்கின்றது. பாவாணரோடும்

பெரியாரோடும் மொழி இனப் போராட்டம் முடிவுற்றது என்று எண்ணியவர்களுக்கே, இனிதான் இருக்கின்றது இடி! எம் போன்றோர் துணை உண்டு; கவலற்க. அன்பன்,

— கணியன், புதுச்சேரி-10.

○: *1223:* நமது முதலமைச்சரும், அமைச்சர்களும் இப்போதுதான் என்னவோ ஈழத் தமிழ் மக்கள் போராட்டத்தினால் தாக்கப்பட்டது போன்று 4 கோடி உருவாவைப் பொருளுதவியாகச் செய்யத் திட்டமிட்டுள்ளனர். இச் செய்தியைக் கேள்வியுற்ற செயவர்த்தனா அப் பொருள்கள் கடத்தல் பொருள்கள் எனக் கருதித் தடை செய்யப்படும் என்று பேசியுள்ளார்.

இப்படி ஈழத்தமிழர்க்கு உதவி செய்யத் துடிப்பதுபோல் நடிக்கும் இவர்கள்தாம் தமிழீழப் போராளிகளுக்குச் சென்று கொண்டிருந்த 90 கோடி உருவா மதிப்புள்ள கருவிகளைக் கைப்பற்றினர். இச் செய்தி வேண்டுமென்றே மறைக்கப் பட்டது. மேலும் செயவர்த்தனா வானூர்தி மூலம் கொண்டு சென்ற கருவிகளைத் தடுக்காமல் விட்டனர், இங்கிருந்த சிலர்: இராசீவிடம் அவ்வூர்தி திருவனந்தபுரத்தில் எரி பொருள் பற்றுக்குறையால் இறங்கிய போது மக்கள் தடை செய்யக் கோரினர். அதற்கு இராசீவ் 'அதிலென்ன 'தமிழர்களைக் கொல்வதற்கு' என்று எழுதி வைத்துள்ளதா' என்று கேட்டார்.

அண்மை நாள்களாக ஈழத்தில் தமிழர்களை முற்றுமாக அழித்தொழிக்கக் குண்டுமழை பொழிகின்றார் செயவர்த்தனா. இவ்வளவு நடந்த பிறகும் இங்கிருக்கும் நம்(!) தலைவர்கள்(?) எம். சி. ஆரும் கலைஞரும் ஒருமுறைகூடக் கூடி இச் சிக்கலைத் தீர்க்கும் வழிவகைகளை ஆராயவில்லை.

மாறாக இச் சிக்கலை அரசியலாக்கி வருவாய் தேட முனைகின்றனர். இவர்கள் தமிழினத்திற்குப் பயன்பட மாட்டார்கள். இவற்றுக்கெல்லாம் ஒரே முடிவு தமிழகத் தமிழின இளைஞர்கள் தனித்தமிழ் நாட்டுப் போராட்டத்தில் குதிப்பதேயாகும். தனித்தமிழ் நாட்டுப் போராட்டம் தொடங்காமல் தமிழீழம் கிடைக்குமென்பது, கன்றீனா மாடு பால் கறக்கும் என்பதற்கு ஒப்பாகும்.

— மா. த. தமிழினியன், மாத்தூர் வ. ஆ.

○: *1224:* ஐயா அவர்கட்கு, க. இராயவேல் எழுதிக்கொள்வது. கடந்த திங்கள்கிழமை திருவொற்றியூரில் நடைபெற்ற உ. த. மு. க. பொதுக் கூட்டத்தைக் காணும் வாய்ப்புப் பெற்றேன். அக் கூட்டத்திற்குச் சிறிதளவுக் கூட்டமே கூடியுள்ளதென மேடையில் பேசிய கழக அன்பர்கள் வருந்தினர். ஆயின், அக் கூட்டத்தில் பாதி அளவுகூட வராத நிலையிலும் சில அரசியல் கட்சிகள் பொதுக் கூட்டம் போடுவதை நான் இங்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எனவே, கூடுகிற கூட்டத்தை எண்ணி நம் கழக அன்பர்கள் வருந்தத் தேவையில்லை என்றே நான் கருதுகின்றேன்.

கூட்டத்தில் ஒரு மடயன் விடுதலை(சுதந்திரம்) கிடைத்திரா விட்டால் மேடை போட்டுப் பேச முடியுமா என்று மதிப்பிற்குரிய தமிழ்மணி அவர்களின் பேச்சில் குறுக்கிட்டதும், தாங்கள் தங்கள் உரையில் அதற்கு மறுமொழியாகப் பேசுவது மட்டுமே உரிமையாகி விடுமா என்றீர்கள். ஆயின், மேடை போட்டு நெஞ்சத்துக்

(தொடர்ச்சி 22-ஆம் பக்கம்)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)